Registered as a Newspaper    பக்கங்கள் 04    விலை: ரூபா 5-00

நல்லூர் ... நூலகம்
யாழ்ப்பாணம்

# ஈழநாதம்

THE EELANAATHAM    Peoples Daily    மக்கள் தினசரி

நாதம் 04    திருவள்ளுவர் ஆண்டு 2024 ஆவணி 10    [26-08-1993]    வியாழக்கிழமை    ஓசை 189

## விறகு கொண்டு செல்வதற்கு அனுமதி வழங்க நடவடிக்கை

குடாநாட்டில் மரங்கள் கண்மூடித்தனமாக தறிக்கப்படுவதனை ஒழுங்குபடுத்துவதற்காக விறகு கொண்டு செல்வதற்கான போக்குவரத்து அனுமதிப் பத்திரம் வழங்கும் நடைமுறையொன்றினை விரைவில் அமுல்படுத்த தமிழீழ பொருண்மிய மேம்பாட்டு நிறுவனம் தீர்மானித்துள்ளது. குடாநாட்டுக்கான தரைப் போக்குவரத்து துண்டிக்கப்பட்ட காலம் முதல் வன்னிப் பகுதிகளில் இருந்து விறகுகள் குடாநாட்டிற்குள் கொண்டு வரப்படாமையினாலும் மற்றும் மின்சாரமின்மை, எரிபொருள் விலையுயர்வு காரணமாக அதிகரித்த விறகுப் பாவனையின் அளவைப் பூர்த்திசெய்வதற்காக கட்டுப்பாடு இன்றி மரங்கள் அழிக்கப்படும் அதேவேளை வெட்டப்படும் மரங்களின் அளவில் ஒரு குறிப்பிட்ட வீதத்தைத்தானும் மீள்நடுகை (4ஆம் பக்கம் பார்க்கம்)

## பலாலி முகாமிலிருந்து ஆட்லறி ஷெல் தாக்குதல்

(வடமராட்சி)

பலாலி சிறிலங்கா இராணுவ முகாமிலிருந்து வளலாய், இடைக்காடு மக்கள் குடியிருப்புக்கள் மீது பலத்த ஆட்லறி ஷெல் தாக்குதல்கள் நேற்று முன்தினம் இரவு முதல் நேற்று காலை வரை மேற்கொள்ளப்பட்டன.

பல ஆட்லறி ஷெல்கள் இப்பகுதியில் விழுந்து வெடித்தன. அதேசமயம் விமானங்களும் அப்பகுதியை வட்டமிட்டவாறு இருந்தது. அப்பகுதிகளிலிருந்து மக்கள் இடம்பெயர்ந்து இருப்பதினால் பாரிய சேதங்கள் ஏற்பட்டதாக தகவல் கிடைக்கவில்லை.

## குண்டுடன் விளையாடிய இருசிறுவர்கள் படுகாயம்

(வவுனியா)

வற்றிய குளத்தில் புதைந்து கிடந்த வெடிகுண்டை எடுத்து விளையாடிய சிறுவர்கள் அக்குண்டு வெடித்ததனால் படுகாயமடைந்தனர்.

வவுனியா சாந்தசோலை என்னுமிடத்தில் சில தினங்களுக்கு முன்னர் இடம்பெற்றது.

எஸ். சுரேஸ் (09), எஸ் கண்ணன் (10) ஆகிய இருவருமே காயமடைந்தனர். இவர்கள் இருவரும் வவுனியா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

இராணுவ நடவடிக்கையின் போது குளத்தில் புதைந்து கிடந்த வெடிகுண்டே அது எனத் தெரியவருகிறது.

## ஊர்காவல் படையினரை ராணுவத்தில் சேர்க்க முயற்சி

(கொழும்பு)

இராணுவத்தில் சேரவிரும்பும் ஊர்காவல் படையினருக்கு அதற்கான அனுமதியை வழங்க ஊர்காவல் படை தலைமையகம் நடவடிக்கை எடுத்துள்ளது.

இராணுவத்தில் சேர்வதற்கு விருப்பம் உடைய ஊர்காவல் படையினர் தமக்கு விண்ணப்பிக்குமாறு இதற்குப் பொறுப்பான பொலிஸ் அதிகாரி அறிவித்துள்ளார்.

இராணுவத்தில் சேரும் ஊர்காவல் படையினருக்கு அதிக சம்பளம், வசதிகள், இராணுவப் பயிற்சி போன்றவை வழங்கப்படும் என அறிவித்துள்ளார்.

வடக்கு-கிழக்குப்பகுதிகளில் 15,000 ஊர்காவல் படையினர் தற்பொழுது உள்ளனர். இவர்கள் இராணுவத்தினருடன் இணைந்து இனஅழிப்பு நடவடிக்கையில் ஈடுபட்டுவருகின்றமை தெரிந்ததே.

# வடபகுதி யுத்த முனைகளில் புலிகளின் கை ஓங்கி வருகிறது!

## கொழும்பு விமர்சகர் தெரிவிப்பு

(கொழும்பு)

“மன்னாரில் பலசதுர மைல்கள் பிரதேசத்தை தம் வசமாக்கிக் கொண்டிருந்த படையினர் தற்பொழுது அப் பெறுமதிமிக்க பகுதிகளைவிட்டு பின்வாங்கியுள்ளமையானது புலிகள் வடக்கு போர்முனையில் எவ்வாறு முன்னேறி வருகின்றனர் என்பதை காட்டுவதாக உள்ளது” என “ஐலண்ட்” வாரஇதழில் பிரபல அரசியல், இராணுவ விமர்சகர் ஒருவர் தெரிவித்துள்ளார்.

மன்னாரின் பல மைல்களை தம் வசமாக்கிக்கொண்டிருந்த படையினர் தற்போது பின்வாங்கி சென்று முடங்கிவிட்டமையானது இராணுவத்தின் ஆட்பலம் குறைவாக இருப்பது காரணமா எனக் கேள்வி எழுப்பியுள்ள அவ்விமர்சகர்,

முன்பு படையினர் முன்னேறி தமது முன்னணிநிலைகளை மன்னாரில் அமைத்த போது நானாட்டான் உயிலங்குளம், அடம்பன் பகுதிகளில் முன்னணி நிலைகளை வைத்திருக்க முடியாது என்று கடமையாற்ற மறுத்த சில இராணுவ லெப்டினன்ட்டுகள் மீது இராணுவ விசாரணை நடைபெற்றதை இப்பத்திரிகை சுட்டிக்காட்டுகிறது. போதியளவு படையினரோ, முன்னணி நிலைகளுக்கு முன்பாக பரவலாக புதைக்க போதியளவு மிதிவெடிகளோ இல்லைஎன்று படையினரால் அடிக்கடி கூறப்பட்டுவந்தது. இப்போது படைகள் மன்னார் பெருநிலபரப்பில் 16 சதுர மைல்களை விட்டு பின்வாங்கிவிட்டன என அப்பத்திரிகை குறிப்பிடுகிறது.

தற்போது வாபஸ் பெறப்பட்ட படையினரின் முன்னணி நிலைகள் பல திறந்த வெளிகளை நோக்கியதாகவே அமைக்கப்பட்டிருந்தன. இதனால் இவை புலிகளிடம்வீழும் அபாயம் இருந்தது. படையினரின்பலத்த கட்டுப்பாட்டில் இருக்கும் மன்னார் தீவினுள் இராணுவரோந்தை அழிக்கக்கூடிய வகையில் புலிகள் ஊடுருவும் போது இந்த முன்னணி நிலைகள் தாக்கப்படும் அபாயம் அதிகமாக இருந்தது.

மன்னார் தீவில் உள்ள ஆஸ்பத்திரிக்கு இரவில் விடுதலைப் புலிகள் வந்துபோவதாக இராணுவத்துடன் கூட இயங்கும் தமிழ்க்குழுவினர்ஒப்புக்கொள்கின்றனர். விடுதலைப் புலிகள் மன்னார் தீவில் படையினரை தாக்கிவிட்டு மறைந்துவிடும் அதே சமயம் மன்னார் பெருநிலப்பரப்பில் இராணுவ முன்னணி நிலைகள் மீது பாரிய தாக்குதலை நடத்தும் சக்தியை கொண்டுள்ளனர். அண்மையில் மன்னார் பெருநிலப்பரப்பில் புலிகளின் நடமாட்டம் அதிகரித்துள்ளதுடன் அயற்பகுதியில் இலவங்குள படைமுகாமும் இரு தடவை தாக்கப்பட்டுள்ளது. இந்நிலை (4 ஆம் பக்கம் பார்க்க)

## கிளாலி - பூநகரி படகுச்சேவை

கிளாலி — பூநகரி படகுச் சேவை இன்று வழமையான நேரத்திற்கு நடைபெறுமென யாழ். மாவட்ட வருவாய்ப் பொறுப்பாளர் அறிவித்துள்ளார்.

## உலங்குவானூர்தி பிரசுரம்வீச்சு

(யாழ்ப்பாணம்)

சிறிலங்கா விமானப்படைக்குச் சொந்தமான உலங்குவானூர்தி ஒன்று நேற்று மாலை 6 மணியளவில் வலிகாமம் மற்றும் அதனை அண்டிய பகுதிகளை நோக்கி துண்டுப்பிரசுரங்களை வீசிச் சென்றுள்ளது.

மேற்படி பகுதிகளை வட்டமிட்ட உலங்குவானூர்தி ( 4 ஆம் பக்கம் பார்க்க )

## மன்னாரில் பொதுமக்கள் படையினரால் கடத்தல்

மன்னார் பெருநிலப்பரப்பிலிருந்து பின்வாங்கிய இராணுவம் அப்பகுதியில் பிடித்து வைத்திருந்த 550 தமிழ் மக்களை பலவந்தமாக மன்னார் தீவிற்கு கொண்டு சென்றுள்ளனர். இப் பகுதியில் 20 மைல் நீளமான பகுதியிலிருந்து பின்வாங்கிச் சென்றமை தெரிந்ததே.

## மண்கிண்டிமலை விசாரணைக் குழு

# வடபகுதித் தளபதிகள் மீது தெரிவித்துள்ள குற்றச்சாட்டுக்கள்

(கொழும்பு)

வடபகுதியில் எங்காவது ... மணலாறு மண்கிண்டி மலை இராணுவ முகாம் புலிகளால் ... பிரிகேடியர் லியனகே மீதான குற்றச்சாட்டுகளாவன. ... தயாரிப்போ இன்றி இருந்தமை.

# சித்திரவதை செய்வதில்

ளது.

இராணுவத்தில் சேர்வதற்கு விருப்பம் உடைய ஊர்காவல் படையினர் தமக்கு விண்ணப்பிக்குமாறு இதற்குப் பொறுப்பான பொலிஸ் அதிகாரி அறிவித்துள்ளார்.

வடக்கு-கிழக்குப்பகுதிகளில் 15,000 ஊர்காவல் படையினர் தற்பொழுது உள்ளனர். இவர்கள் இராணுவத்தினருடன் இணைந்து இன அழிப்பு நடவடிக்கையில் ஈடுபட்டுவருகின்றமை தெரிந்ததே

காமம் மற்றும் அதனை அண்டிய பகுதிகளை நோக்கி துண்டுப்பிரசுரங்களை வீசிச் சென்றுள்ளது.

மேற்படி பகுதிகளை வட்டமிட்ட உலங்குவானூர்தி

(4 ஆம் பக்கம் பார்க்க)

காரணமா எனக் கேள்வி எழுப்பியுள்ள அவ்விமர்சகர்,

முன்பு படையினர் முன்னேறி தமது முன்னணிநிலைகளை மன்னாரில் அமைத்த போது நானாட்டான் உயிலங்குளம், அடம்பன் பகுதிகளில் முன்னணி நிலைகளை வைத்திருக்க முடியாது என்று

நிலைகளுக்கு முன்பாக பரவலாக புதைக்க போதியளவு மிதிவெடிகளோ இல்லையென்று படையினரால் அடிக்கடி கூறப்பட்டு வந்தது. இப்போது படைகள் மன்னார் பெருநிலபரப்பில் 16 சதுர மைல்களை விட்டு பின்வாங்கி விட்டன என அப்பத்திரிகை குறிப்பிடுகிறது.

தற்போது வாபஸ் பெறப்பட்ட படையினரின் முன்னணி நிலைகள் பல திறந்த வெளிகளை நோக்கியதாகவே அமைக்கப்பட்டிருந்தன. இதனால் இவை புலிகளிடம்வீழும் அபாயம் இருந்தது.

அதிகமாக இருந்தது.

மன்னார் தீவில் உள்ள ஆஸ்பத்திரிக்கு இரவில் விடுதலைப் புலிகள் வந்துபோவதாக இராணுவத்துடன் கூட இயங்கும் தமிழ்க்குழுவினர் ஒப்புக்கொள்கின்றனர். விடுதலைப் புலிகள்

மையில் மன்னார் பெருநிலப்பரப்பில் புலிகளின் நடமாட்டம் அதிகரித்துள்ளதுடன் அயற்பகுதியில் இலவன்குள படைமுகாமும் இரு தடவை தாக்கப்பட்டுள்ளது. இந்நிலை

(4 ஆம் பக்கம் பார்க்க)

## மன்னாரில் பொதுமக்கள் படையினரால் கடத்தல்

மன்னார் பெருநிலப்பரப்பிலிருந்து பின்வாங்கிய இராணுவம் அப்பகுதியில் பிடித்து வைத்திருந்த 550 தமிழ் மக்களை பலவந்தமாக மன்னார் தீவிற்கு கொண்டு சென்றுள்ளனர். இப் பகுதியில் 20 மைல் நீளமான பகுதியிலிருந்து பின்வாங்கிச் சென்றமை தெரிந்ததே.

### மண்கிண்டிமலை விசாரணைக் குழு

# வடபகுதித் தளபதிகள் மீது தெரிவித்துள்ள குற்றச்சாட்டுக்கள்

(கொழும்பு)

வடபகுதியில் எங்காவது விடுதலைப்புலிகள் தாக்குதல் நடத்தலாம் என்று எச்சரிக்கப்பட்டிருந்தும் வெலிஓயா பகுதிக்கு பொறுப்பான பிரிகேடியர் லியனகேயை முகாமை விட்டு வெளியே செல்ல அனுமதித்தமை வடபகுதி தளபதி மேஜர் ஜெனரல் தலுவத்தை விட்ட தவறு என்றும் உஷாராக இருக்க வேண்டிய நேரத்தில் பிரிகேடியர் லியனகே தனது பகுதி பொறுப்பை கவனியாது கொழும்பில் தங்கியிருந்திருக்கின்றார். என்றும் இராணுவ விசாரணைக்குழு தனது தீர்ப்பில் கூறியுள்ளது.

மணலாறு மண்கிண்டி மலை இராணுவ முகாம் புலிகளால் தகர்க்கப்பட்டதற்கு காரணம் குறித்து ஆராய அமைக்கப்பட்ட இராணுவ விசாரணைக் குழுவின் அறிக்கை வெளியாகியுள்ளது. அதன் விபரம்வருமாறு.

வடபகுதி இராணுவத் தளபதி மேஜர் ஜெனரல் ஆர். டி. எஸ். தலுவத்த மீதான குற்றச்சாட்டுகளாவன

ஃ அசட்டையாக இருந்தமை.

ஃ புலிகள் தாக்கலாம் என்ற அச்சுறுத்தலை - பாரதூர தன்மையை கவனத்தில் கொள்ளாமை

வெலிஓயா பகுதி தளபதி பிரிகேடியர் லியனகே மீதான குற்றச்சாட்டுகளாவன.

ஃ தாக்குதலுக்கான அச்சுறுத்தல் இருந்தபோது கொழும்பிற்கு சென்றமை.

ஃ வெலிஓயா பாதுகாப்பை மேற்பார்வையிடாமை.

ஃ இராணுவ தலைமையக கட்டளைகளுக்கு ஏற்ப நடந்து கொள்ளாமை.

மண்கிண்டிமலை முகாம் பொறுப்பாளர் மேஜர் ஜே. ஏ. மசாகாரா மீதான குற்றச்சாட்டுகளாவன.

ஃ தனது முகாமையும் படைப் பிரிவையும் மேற்பார்வையிடாமை.

ஃ போதியளவுஉஷாரோ முன்தயாரிப்போ இன்றி இருந்தமை.

இவர்களை தொடர்ந்து அடுத்தமட்ட இராணுவ அதிகாரிகள் சிலரும் அசட்டையாக இருந்தமை குறித்து விசாரணை மன்றால் குற்றவாளிகளாகக் காணப்பட்டுள்ளனர். இவர்கள் அனைவருக்கும் எதிராக நடவடிக்கை

(4 ஆம் பக்கம் பார்க்க)

# சித்திரவதை செய்வதில் பலாலி முகாம் முதலிடம்

## விடுவிக்கப்பட்டவர் தகவல்

(வடமராட்சி)

அப்பாவித் தமிழ் இளைஞர்களை அடித்துத் துன்புறுத்துவதிலும், கொலை செய்வதிலும், கொடுமைப் படுத்துவதிலும் சிறிலங்கா படையினருக்கு நிகர் வேறு எவரும் இருக்க முடியாது. இது எனது கடந்த கால இரண்டரைவருட சிறைவாச அனுபவத்தில் இருந்து புலப்படுகிறது.

பல்லேகல முகாமில் இருந்து இரண்டாவது கட்டமாக விடுதலை செய்யப்பட்ட சற்கோட்டையைச் சேர்ந்த இளைஞர் ஒருவர் எமது வடமராட்சி செய்தியாளருக்குத் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கை

(4 ஆம் பக்கம் பார்க்க)

### கிழக்கிலும் வவுனியாவிலும்

# உள்ளூராட்சி தேர்தல் அரசு கைவிட்டது

[கொழும்பு]

கிழக்கு மாகாணத்திலும் வடக்கில் வவுனியா நகரிலும் உள்ளூராட்சித் தேர்தலை நடாத்துவது என்ற தனது முன்னைய திட்டத்தை சிறிலங்கா அரசு கைவிட்டுள்ளதாக அறிவித்துள்ளது. இத் தேர்தல் தொடர்பாக தம்மைச் சந்திக்கச் சென்ற தமிழ் குழுக்களின் பிரதிநிதிகளிடம் சிறிலங்கா ஜனாதிபதி டி. பி. விஜயதுங்க இந்த தகவலை தெரிவித்துள்ளார்.

முன்னதாக இத் தேர்தலை ஒக்டோபர் மாதத்தில் நடத்துவது எனவும் செப்டெம்பர் மாதத்தில் நியமனப்பத்திரங்களை தாக்கல் செய்யலாம் எனவும் தேர்தல் ஆணையாளர் சந்திரனாந்த டிசில்வா அறிவித்திருந்தமை குறிப்பிடத்தக்கது.

இத் தேர்தல் தொடர்பாக ஐக்கிய தேசியக் கட்சி இராஜாங்க அமைச்சர் திருமதி ராஜமனோகரி புலேந்திரன் மற்றும் எம். ஜி. எச். மஹ்றுப் ஆகியோர் டி பி. விஜயதுங்கவிற்கு அனுப்பிய கடிதத்தில் புளொட். ரெலோ குழுவினர் ஆயுதங்களுடன் திரியும் வரை தேர்தலை நடத்த முடி

[4 ஆம் பக்கம் பார்க்க)

# பல்லேகல முகாமிலிருந்து 23 இளைஞர்கள் விடுதலை

(வடமராட்சி)

பல்லேகல புனர்வாழ்வு முகாமிலிருந்து இம்மாதம் 20ஆம் திகதி வடக்குக் கிழக்கைச் சேர்ந்த 23 இளைஞர்கள் விடுதலை செய்யப்பட்டனர்.

இவர்களில் வடமராட்சியைச் சேர்ந்த ஐவர் வந்து சேர்ந்தனர். இவர்களின் பெயர் விபரம் பின்வருமாறு.

செல்வமனோகரன் (பொலிகண்டி) எம். குமார்ராஜ் (சற்கோட்டை) எம். பொன்னுத்துரை (வியாபாரி மூலை) இ. யுலியத் பிராங்கிலின் (சற்கோட்டை) மற்றும் நாகர்கோவிலைச் சேர்ந்த வருமாவர்.

(4 ஆம் பக்கம் பார்க்க)

### மண்கிண்டிமலை தோல்வி எதிரொலி

# படைத் தளபதிகளுக்கு பதவி உயர்வு இல்லை

மண்கிண்டிமலை இராணுவ முகாம் வீழ்ச்சி அடைந்தமை தொடர்பாக இராணுவ அதிகாரிகள் மீது நடவடிக்கை எடுக்கப்படவுள்ளது. இதன் விளைவாக முக்கிய இராணுவ அதிகாரிகள் சிலருக்கு எதிர்காலத்தில் பதவி உயர்வுகள் வழங்கப்படமாட்டாது எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது. குறிப்பாக வடபிராந்திய இராணுவத் தளபதி ரோஹான் தலுவத்த, ஜனகபுர முகாம் பொறுப்பதிகாரி பாரிலியனகே போன்றோர் இதனால் பாதிக்கப்படவுள்ளனர்.

இதேவேளை முப்படைகளினதும் இணைப்பாளராக வெலிஓயா பகுதியில் கடமையாற்றிய பிரிகேடியர் அசோகா ஜெயவர்த்தனா மலேசியாவுக்கு புறப்பட்டுச் செல்ல கூட்டுப்படைத் தலைமை தளபதி ஜெனரல் ஹமில்டன் வனசிங்க அனுமதி அளித்துள்ளார். அவரது இடத்துக்கு கூட்டுப்படைத் தலைமையகத்தின் முன்னாள் பேச்சாளராக கடமையாற்றிய கேணல் சரத் முனசிங்க நியமிக்கப்பட்டுள்ளார்.

மேலும் ஜெனரல் ஹமில்டன் வனசிங்க தமது பாரியாருடன் மலேசியா மற்றும் சிங்கப்பூருக்கான தனிப்பட்ட விஜயமொன்றை மேற்கொண்டு புறப்பட்டுச் சென்றுள்ளார்.

இவரது இடத்திற்கு இராணுவத் தளபதி லெப். ஜெனரல் சிசில் வைத்தியரட்ன கூட்டுப் படைத் தலைமையகத் தளபதியாக தற்காலிகமாக பதவி ஏற்றுள்ளார்.

## என்னை குறை கூறுபவர் என் பொறுப்பை ஏற்கட்டும்

(கொழும்பு)

-சிசில் பாய்ச்சல்

மணலாறு மண்கிண்டிமலை இராணுவ முகாம் தகர்க்கப்பட்டது குறித்து தவறை இராணுவத்தளபதி சிசில் வைத்தியரட்னவே பொறுப்பேற்கவேண்டும் என வெளியான செய்திகளை சிசில் வைத்தியரட்ன நிராகரித்துள்ளார்.

இவ்வாறு குறைகூறுபவர்கள் என் பொறுப்பை பாரம் எடுக்கட்டும். நான் இராணுவத்திற்கு தலைமை தாங்குவது மட்டுமே. ஆனால் பிரிவுக் குழு, தாக்குதல் குழு தலைவர்கள் வேலைகளையும், ஜனகபுர வெளிக்கள அதிகாரிகள் வேலைகளையும் நானே செய்ய வேண்டுமா என்று அவர் கேள்வி எழுப்பியுள்ளார்.

### மண்கிண்டி மாதிரி அமைப்பு வெள்ளி வரை பார்வையிடலாம்

ஆனைக்கோட்டை கோம்பையன்மணல் பகுதியில் அமைக்கப்பட்டுள்ள மண்கிண்டி மலை இராணுவ முகாம் மாதிரி அமைப்பினை மக்கள் நாளை வெள்ளிக்கிழமை வரை பார்வையிடலாம். இம் மாதிரி அமைப்பினைப் பார்வையிடுவதற்கு வசதியாக வாகனப் போக்குவரத்து ஒழுங்குகள் மேற்கொள்ளப்பட்டுள்ள தாக கண்காட்சி அமைப்பாளர்கள் அறிவித்துள்ளனர்.

# வெற்றிநாள் நிகழ்வுகளில் பெருமளவுமக்கள் பங்கேற்பு

சிறிலங்கா அரசையும் சிங்களப் படைகளையும் திகைப்பில் ஆழ்த்திய "இதயபூமி-1" என்ற விடுதலைப் புலிகள் வெற்றிகரமான தாக்குதல் நடவடிக்கையின் வெற்றிநாள் நிகழ்வுகள் நேற்று வடபகுதி எங்கும் சிறப்பாக நடைபெற்றன.

வரலாற்றுச் சிறப்புமிக்க மேற்படி தாக்குதலின் வெற்றியை கொண்டாடுவதற்காகவும் தாயக விடுதலைப் போராட்டத்தில் மேற்கொள்ளப்பட்டு வரும் வீரம்செறிந்த தாக்குதல் நடவடிக்கைகளையும் இதன்மூலம் போராட்டத்தில் ஏற்பட்டுவரும் வளர்ச்சிப் போக்கை உலகுக்கு பறைசாற்றும் முகமாகவும் இந்தவெற்றி நாள் கொண்டாட்டங்கள் அமைந்திருந்தன.

வெற்றி நாளை முன்னிட்டு வடதமிழீழமெங்கும் எழுச்சிக் கோலம் பூண்டு காணப்படுகிறது. வீதிகள் தோறும் தாக்குதலின் வெற்றியைப் பறைசாற்றும் பதாகைகளும், கருத்துப் படங்களும் கட்டப்பட்

(4 ஆம் பக்கம் பார்க்க)

## வரி விளம்பரம்

### ஆண்டு 4 பரீட்சை

ஒவ்வொரு சனிக்கிழமையும் நடாத்தப்படும் புலமைப் பரிசில் (1994) மாணவருக்கான தொடர் பரீட்சையின் 7 வது பரீட்சை 28 08.93 சனிக்கிழமை பி.ப3.00மணிக்கு நடைபெறும்.

வினாத்தாள் பெற்றுக் கொள்ளலாம். எடிசன் அக்கடமி யாழ் இந்து அருகில் கே.கே.எஸ்.வீதி. யாழ்ப்பாணம். (5770)

### தவறிவிட்டது

க. நாகரத்தினம் ஆகிய எனது கையேட்டுக்கொப்பி (80பக்க கொப்பி) சுன்னாகத்தில் இருந்த திருநெல்வேலிக்கு (மருதனாமடம் உரும்பராய் ஊடாக) பயணம் செய்யும் போது கை தவறிவிட்டது. தயவுசெய்து கண்டெடுத்தவர்கள் ஈழநாதம் காரியாலயத்தில் ஒப்படைக்கவும். சன்மானம் வழங்கப்படும். (5781)

### கண்டெடுப்பு

கொழும்பு கிரலப்பனை றோ. க. த.க.பாடசாலையில் கல்வி கற்பிக்கும் ஆசிரியையாகிய செல்வி மேனகா கிருஷ்ண பிள்ளை என்பவரது இரண்டு உத்தியோகபூர்வ அடையாள அட்டை மற்றும் ஆவணமொன்றும் வீதியில் கண்டெடுக்கப்பட்டு எமது காரியாலயத்தில் ஒப்படைக்கப்பட்டுள்ளது. உரியவர் வந்து பெற்றுக் கொள்ளவும்.

## மீனவர்மீது தாக்குதல் கடற்படை அட்டகாசம்

(வடமராட்சி)

பருத்தித்துறைக் கடற்பரப்பில் மீனவர் படகுகள் மீது சிறிலங்கா கடற்படையினர் நடத்திய தாக்குதல்களினால் பல லட்சரூபா பெறுமதியான சொத்துக்கள் நாசமாக்கப்பட்டன.

நேற்றுக் முன்தினம் காலை 7 மணியளவில் சக்கோட்டை முனைக் கடற்பகுதியில் தொழிலில் ஈடுபட்டிருந்த மீனவர் படகுகள் மீது கடற்படையினர் தாக்குதலை மேற்கொண்டதுடன் மீன்களையும் அள்ளிச்சென்றனர்.

இத் தாக்குதலினால் படகொன்று சேதமடைந்ததுடன் மற்றொரு படகு துப்பாக்கி சூட்டுக்கு இலக்காகியது. மீனவர்கள் பிடித்து வைத்திருந்த பெறுமதிவாய்ந்த மீன்களையும் இரு வெளி இணைப்பு இயந்திரங்களையும் வலைகளையும் கடற்படையினர் பறித்துச் சென்றுவிட்டனர்.

என்ஜினைத் தாங்கி ஒன்று சேதமாக்கப்பட்டதால் என்ஜின் விரயமாகியது. இதனால் கரைக்கு வரமுடியாது தத்தளித்த மீனவர்களை மற்றொரு படகு கரை சேர்த்தது. (யோ), (30)

தனியார் கல்வி நிறுவன ஒன்றியம்

## பொதுச் சபைக் கூட்டம் யாழ் மாவட்டம்

தனியார் கல்வி நிறுவன பொதுச்சபைக் கூட்டம் எதிர்வரும் 27-08-1993 வெள்ளிக்கிழமை முற்பகல் 10.00மணிக்கு எழிலகத்திற்கு முன்பாக அமைந்துள்ள புதிய விஞ்ஞானக் கல்விக் கழகத்தில் நடைபெறும். அங்கத்தவர்கள் அனைவரையும் தவறாது சமுகமளிக்குமாறு கேட்டுக்கொள்கிறோம்.

பொது நிர்வாக சபைக்கூட்டம் 9.00 மணிக்கு நடைபெறும்.

பொதுச்செயலாளர்

**தனியார் கல்வி நிறுவன ஒன்றியம்**

(சி-7260)

## தடை செய்யப்பட்ட பொருள் எடுத்துவந்தோர் தடுப்பு

வவுனியாவிலிருந்து தடைசெய்யப்பட்ட பொருட்களை எடுத்து வந்த மூவர் இராணுவத்தினரால் சில நாட்கள் தடுத்து வைக்கப்பட்டபின் மன்னார் வீதியால் அனுப்பப்பட்டுள்ளனர்.

வேட்டர்கிழங் குளத்தை சேர்ந்த முத்துக்கறுப்பன், சந்தோப்பை சேர்ந்த திருநாவுக்கரசு அன்னலட்சுமி கணவரயன் ளத்தை சேர்ந்த சேதீஸ்வரன் ஆகியோரே படையினரால் தடுத்துவைக்கப்பட்டு மன்னார் வீதியால் அனுப்பப்பட்டவர்களாவர்.

## அரசாங்க அறிவித்தல்

சுகாதாரத் திணைக்களம், யாழ்ப்பாணம்.

### துணிவகைகள், மரத்தளபாடங்கள் வழங்கல்

கீழே விபரிக்கப்பட்ட துணிவகைகள், மரத்தளபாடங்கள் வழங்குவதற்கான முத்திரையிடப்பட்ட (Sealed) கேள்விப்பத்திரங்கள் எதிர்வரும் 10.09 93ஆம் திகதி பிற்பகல் 1 30 மணிவரை ஏற்றுக்கொள்ளப்படும்.

**துணிவகைகள்**

| | | |
|---|---|---|
| 1 | கோடிட்ட துணி 45'' × 90'' | — 450 |
| 2. | ஏப்ரன் நீலம் | — 25 |
| 3. | தலையணை (பஞ்சு) | — 125 |
| 4. | தலையணை உறை 29'' × 19'' (வெள்ளை) | — 125 |
| 5. | முகத்துவாய் 45'' × 22'' (வெள்ளை) | — 150 |
| 6. | ஸ்நானதுவாய் $26\frac{1}{2}$'' × 52'' (வெள்ளை) | — 150 |
| 7. | டஸ்ரர் 27'' × 27'' (கோடிட்டது) | — 100 |
| 8. | திரைச்சீலை (கேஸ்மென்ற்) | — 325 மீற்றர் |

**மரத்தளபாடங்கள்**

| | | |
|---|---|---|
| 1. | பெட்ஸ்ரல் மேசை $4\frac{1}{4}' \times 2\frac{1}{2}' \times 2\frac{1}{2}'$ (இரண்டு லாச்சி, முதிரை) | 15 |
| 2. | மேசை சாதாரணம் $4\frac{1}{2}' \times 2\frac{1}{2}' \times 2\frac{1}{2}'$ (இரண்டு லாச்சி, முதிரை) | 20 |
| 3 | கதிரை கைபிடியுடன் (பொதுத்தரம், முதிரை) | 40 |
| 4. | கதிரை சாதாரணம் (பொதுத்தரம், முதிரை) | 50 |
| 5. | சாரிமனை வாங்கு 6' × 18'' × 2'10'' (முதிரை) | 48 |
| 6. | தட்டெழுத்தாளர் மேசை $4' \times 2' \times 2\frac{1}{2}'$ (முதிரை) | 02 |
| 7 | தட்டெழுத்தாளர் கதிரை (முதிரை) | 02 |


மேற்படி கேள்விப் பத்திரங்கள் உங்களால் தயாரிக்கப்பட்டு உறையில் இடப்பட்டு அரக்கு முத்திரை இடப்படல் வேண்டும் அத்துடன் அவ்வுறையில் இடது பக்க மேல் மூலையில் ''யாழ் சுகாதார திணைக்களத்திற்கு துணிவகைகள், மரத்தளபாடங்கள் வழங்குவதற்கான கேள்விப் பத்திரம்'' என்று குறிப்பிடல் வேண்டும். இப்பத்திரங்கள் எதிர்வரும் 10.09.93ஆம் திகதி பிற்பகல் 2 00 மணிக்கு திறக்கப்படும் கேள்விப்பத்திரங்கள் சமர்ப்பித்தவர்கள் கேள்விப்பத்திரங்கள் திறக்கப்படும்போது சமுகமளிக்கலாம் அல்லது எழுத்து மூலமான அதிகாரம் வழங்கப்பட்ட பிரதிநிதி ஒருவரைச் சமுகமளிக்க ஒழுங்கு செய்யலாம் ஏற்றுக்கொள்ளப்படும் கேள்விதாரர் 07 10 93ற்கு முன் பொருள்களை வழங்க வேண்டும் இப் பொருள்களின் மாதிரிகளைப் பார்வையிட விரும்புவோர் 02.09 93ஆம் திகதி காரியாலய நேரத்தில் பார்வையிடலாம். ஏற்றுக்கொள்ளப்படும் கேள்விக்குரியவர் வழங்கும் பொருளின் மாதிரிகளை முதலில் காண்பித்து அனுமதி பெறவேண்டும்.

வைத்திய கலாநிதி பொ. இரத்தினசபாபதி
சுகாதார சேவைகள் பிராந்திய பணிப்பாளர்.
23-08 93

சு. சே. பி ப. பணிமனை,
57, விக்டோரியா வீதி,
யாழ்ப்பாணம். (சி/7259)

## 1ம் ஆண்டு நினைவஞ்சலி

## 3-ம் ஆண்டு நினைவஞ்சலி



செட்டிகுளம் மண்ணில்: 5-2-78

மண்டைதீவு மண்ணில்: 25-8-90

### வீரவேங்கை எட்றிக்ஸ்

ஆசீர்வாதம் எஸ்ரீபன் அனுராஜன்
(4-ம் வட்டாரம், புங்குடுதீவு)

ஆண்டு மூன்றானாலும் ஆறாது நெஞ்சமது
ஆறாத்துயரினிலே அனைவரையும் மூழ்கவிட்டீர்.

27 8-93ல் நாவாந்துறை பரலோகமாதா தேவாலயத்தில் நடைபெறும் திவ்விய பூசைப்பலியில் உமது ஆத்தும இளைப்பாற்றியை வேண்டி நிற்கும்.

தற்போதைய விலாசம்:
1007,
மானிப்பாய் வீதி,
யாழ்ப்பாணம்
(5773)

ஐயா, அம்மா,
சகோதரர் சகோதரிகள்,
அக்காமார், அண்ணிமார்,
பெறாமக்கள், மருமக்கள்.

## நினைவு கூருகின்றோம்...
## 1993-08-26

1985ஆம் ஆண்டு இதே தினத்தில் பயிற்சி முகாமில் எதிர்பாராத விதமாக ஏற்பட்ட விபத்தில் எம்மைப் பிரிந்த-

★ **மரைக்கார்** (சு. தர்மராசா - சோலை - மன்னார்)

1987ஆம் ஆண்டு மன்னார் -நானாட்டான்பகுதியில் தேசவிரோதசக்திகளினால் கொலை செய்யப்பட்டு எமைப்பிரிந்த-

**கில்மன்** (செல்வநாயகம் செல்வகுமார் - பாலைக்குழி - மன்னார்)

**ரஞ்சன்** இம்மானுவேல் ரஞ்சன் - பிச்சைக்குளம்-முருங்கன் - மன்னார்)

**அருச்சுனா** (ஆசீர்வாதம் சகாயம் - நானாட்டான்-மன்னார்)

அம்பாறையில் சிங்களக்காடையர்களினால் அடித்துக் கொல்லப்பட்ட தமிழ் விவசாயி

1989ஆம் ஆண்டு இந்தியப்படையினருடனான சமரில் வீரச்சாவெய்திய-

**நிக்கலஸ்** (— சிறிகுகன் - மட்டு)

★ **ஆனந்தன்** (— — வீரமுனை, சம்மாந்துறை - அம்பாறை)

★ **ரவி** (— பிரகாஷ்-)

★ **பாக்கிராஜா** (கந்தையா மைக்கல்ராஜ்)

★ **தட்சணா** (— சற்குணராசா - )

அம்பாறை - அக்கரைப்பற்றுப் பகுதியில் தேசவிரோதசக்திகளினால் கடத்திச் செல்லப்பட்டு சுட்டுக்கொலை செய்யப்பட்ட-

★ **சாலிக்குட்டி** (— — அக்கரைப்பற்று - அம்பாறை)

திருமலையில் தேசவிரோத சக்திகளுடனான சமரில் வீரச்சாவெய்திய-

★ **பிரபா** (தியாகராசன் செல்வகுமார் - திருமலை)

தமிழீழ பொருண்மிய மேம்பாட்டு நிறுவனத்தால் நடாத்தப்படும்

## ஒன்பது மாத கால விவசாய பயிற்சிநெறி 1993/94

தமிழீழ பொருண்மிய மேம்பாட்டு நிறுவனத்தால் விவசாயத்துறையில் ஒன்பது மாத காலப் பயிற்சி நெறி அளிப்பதற்காக தகுதியானவர்களிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

தகைமைகள்:- [1] விண்ணப்பதாரர் க. பொ. த [சா/த] பரீட்சையில் விஞ்ஞானம், கணிதம் உட்பட ஆறு பாடங்களில் சித்தியடைந்திருத்தல் வேண்டும்.

[2] க.பொ.த [உ/த] பரீட்சையில் இரசாயனவியல், தாவரவியல் பாடங்களில் சித்தி பெற்றிருப்பின் விசேட தகைமையாகக் கருதப்படும்.

**விண்ணப்ப முடிவு திகதி:- 06.09.93**

அனுப்ப வேண்டிய முகவரி:- **தமிழீழ பொருண்மிய மேம்பாட்டு நிறுவனம்,**
மாவட்டச் செயலகம்,
கோண்டாவில்.

★ விண்ணப்பப் படிவங்கள் கீழ்வரும் மாதிரிப்படிவ முறையில் தயாரித்து அனுப்பப்

## விவசாய பயிற்சிநெறி 1993/94

தமிழீழ பொருண்மிய மேம்பாட்டு நிறுவனத்தால் விவசாயத்துறையில் ஒன்பது மாத காலப் பயிற்சி நெறி அளிப்பதற்காக தகுதியானவர்களிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

தகைமைகள்:- [1] விண்ணப்பதாரர் க.பொ.த [சா/த] பரீட்சையில் விஞ்ஞானம், கணிதம் உட்பட ஆறு பாடங்களில் சித்தியடைந்திருத்தல் வேண்டும்.

[2] க.பொ.த [உ/த] பரீட்சையில் இரசாயனவியல், தாவரவியல் பாடங்களில் சித்தி பெற்றிருப்பின் விசேட தகைமையாகக் கருதப்படும்.

### விண்ணப்ப முடிவு திகதி:- 06.09.93

அனுப்ப வேண்டிய முகவரி:- **தமிழீழ பொருண்மிய மேம்பாட்டு நிறுவனம்,**
மாவட்டச் செயலகம்,
கோண்டாவில்.

★ விண்ணப்பப் படிவங்கள் கீழ்வரும் மாதிரிப்படிவ முறையில் தயாரித்து அனுப்பப்படுதல் வேண்டும். விண்ணப்பப் படிவத்துடன் பிறப்புச் சான்றிதழ் கல்விச்சான்றிதழ்கள் ஆகியவற்றின் பிரதிகள் இணைத்து அனுப்பப்படல் வேண்டும்.

குறிப்பு:- [1] மேற்படி பயிற்சி நெறியை கற்று முடிப்பதற்கான செலவுகளும் உணவும் இலவசம்.

[2] விண்ணப்பதாரிகள் அனைவரும் எதிர்வரும் 17.09-93 காலை 9.00 மணிக்கு தமிழீழ பொருண்மிய மேம்பாட்டு நிறுவன யாழ். மாவட்டச் செயலகத்தில் நடைபெறும் நேர்முகப் பரீட்சைக்கு தவறாது சமுகமளித்தல் வேண்டும். தனிப்பட்ட அழைப்புகள் அனுப்பி வைக்கப்படமாட்டாது.

(சி/7278)

### மாதிரி விண்ணப்பப் படிவம்

1. முழுப்பெயர்: ....................................................
2. நிரந்தர முகவரி: ....................................................
....................................................
3. தற்போதைய முகவரி: ....................................................
....................................................
4. பிறந்த திகதி: ....................................................
வயது: ....................................................
5. கல்வித்தகைமை: ....................................................
....................................................
6. விவசாய அனுபவங்கள்: ....................................................
7. தந்தையின் முழுப்பெயர்: ....................................................
,, முகவரி: ....................................................
,, தொழில்: ....................................................
8. குடும்ப மாத வருமானம்: ....................................................
9. வேறு தகைமைகள்: ....................................................

மேற்கூறிய தகவல்கள் யாவும் சரியானவையெனவும், உண்மையானவையெனவும், பயிற்சி நெறிக்குத் தெரிவு செய்யப்படுமிடத்து பயிற்சி முடியும்வரை தொடர்ந்து பங்குபற்றுவேன் எனவும் உறுதியளிக்கின்றேன்.


திகதி: ... ....................................... ....................................................
விண்ணப்பதாரரின் கையொப்பம்.

பத்திரங்கள் எல்லாம் 10.09.93ஆம் திகதி பிற்பகல் 2.00 மணிக்கு திறக்கப்படும் கேள்விப்பத்திரங்கள் சமர்ப்பித்தவர்கள் கேள்விப்பத்திரங்கள் திறக்கப்படும்போது சமுகமளிக்கலாம் அல்லது எழுத்து மூலமான அதிகாரம் வழங்கப்பட்ட பிரதிநிதி ஒருவரைச் சமுகமளிக்க ஒழுங்கு செய்யலாம் ஏற்றுக்கொள்ளப்படும் கேள்விதாரர் 07.10.93ற்கு முன் பொருள்களை வழங்க வேண்டும் இப் பொருள்களின் மாதிரிகளைப் பார்வையிட விரும்புவோர் 02.09.93ஆம் திகதி காரியாலய நேரத்தில் பார்வையிடலாம். ஏற்றுக்கொள்ளப்படும் கேள்விக்குரியவர் வழங்கும் பொருளின் மாதிரிகளை முதலில் காண்பித்து அனுமதி பெறவேண்டும்.

வைத்திய கலாநிதி பொ. இரத்தினசபாபதி
சுகாதார சேவைகள் பிராந்திய பணிப்பாளர்.
23-08.93

சு.சே.பி.ப. பணிமனை,
57, விக்டோரியா வீதி,
யாழ்ப்பாணம். (சி/7259)

## 1ம் ஆண்டு நினைவஞ்சலி



**வீரவேங்கை சேகர்**
[தங்கராசா ஸ்ரீஸ்கந்தராசா]

மண்ணில் 15-4-1974 — விண்ணில் 26 8-1992

ஆண்டு ஒன்று ஓடி மறைந்திட்ட போதும்
மனதிலே உன்நினைவு மாறவில்லை
பண்டத்தரிப்பில நீர் இறந்த செய்தி எங்கள்
நெஞ்சினிலே நினைவலைகள் போலே வந்து
மாதா, பிதா, சோதரர்கள் மைத்துனர் மனதினையே
கல்லில் மேல் எழுத்துப்போல் காணுதுவே
உந்தனது ஆன்மாவின் சாந்திக்காய்
ஈசனது பாதமலரைப் போற்றுவோமே

''கமலவாசம்''
சுப்பர்மடம்,
பருத்தித்துறை

பிரிவால் வாடும்,
பெற்றோர், சகோதரர்,
மைத்துனர், மருமக்கள்
உறவினர்.

(5727)

**அருச்சுனா** (ஆசிர்வாதம் சகாயம் - நானாட்டான்-மன்னார்)

அம்பாறையில் சிங்களக்காடையர்களினால் அடித்துக் கொல்லப்பட்ட தமிழ் விவசாயி

1989ஆம் ஆண்டு இந்தியப்படையினருடனான சமரில் வீரச்சாவெய்திய-

**நிக்கலஸ்** (— சிறிகுகன் - மட்டு)
★ **ஆனந்தன்** (— — வீரமுனை, சம்மாந்துறை - அம்பாறை)
★ **ரவி** (— பிரகாஷ்-)
★ **பாக்கிராஜா** (கந்தையா பைக்கல்ராஜ்)
★ **தட்சணா** (— சற்குணராசா - )

அம்பாறை - அக்கரைப்பற்றுப் பகுதியில் தேசவிரோதசக்திகளினால் கடத்திச் செல்லப்பட்டு சுட்டுக்கொலை செய்யப்பட்ட-

★ **சாலிக்குட்டி** (— — அக்கரைப்பற்று - அம்பாறை)

திருமலையில் தேசவிரோத சக்திகளுடனான சமரில் வீரச்சாவெய்திய-

★ **பிரபா** (தியாகராசன் செல்வகுமார் - திருமலை)
★ **சங்கர்** (அரசுநோயல் சைமன் - திருமலை)
★ **ரசிட்** (— — திருமலை)

தேசவிரோதசக்திகள் மேற்கொண்ட துப்பாக்கிச் சூட்டில் வீரச்சாவெய்திய-

★ **ஜீவா** (அன்ரன் பெனடிக்ற் குணசிங்கம் - மீனாட்சியம்மன் கோயிலடி - சாவகச்சேரி)

1990ஆம் ஆண்டு மண்டைதீவில் சிறிலங்கா இராணுவத்தினருடனான சமரில் விழுப்புண் அடைந்து வீரச்சாவெய்திய-

**முத்துராமன்** (தவராசா இராமகிருஷ்ணன் - ஆதிகோவிலடி - வல்வெட்டித்துறை)
**ஜக்சன்** [பூபாலசிங்கம் சசிதரன் - புகையிரத நிலைய வீதி - பளை]

முல்லைத்தீவில் தரையிறங்க முற்பட்ட சிறிலங்கா இராணுவத்தினருடனான நேரடிச் சமரில் வீரச்சாவெய்திய-

**தங்கத்துரை** (கந்தசாமி செல்வராசா - வங்காலை - மன்னார்)
**வித்தி** [— விஜயகுமார் - கிராஞ்சி, பூநகரி - மன்னார்]
**முகுந்தன்** [குணசேகரம் யோகராசா - 5-ம் வட்டாரம் - நெடுந்தீவு]
**அருளப்பு** [சுப்பிரமணியம் ஜெயரட்ணம் - கரணவாய் கிழக்கு, கரவெட்டி - யாழ்]
**ரஜனி** [— — —]

அம்பாறையில் சிறிலங்கா இராணுவத்தினரால் படுகொலை செய்யப்பட்ட மட்டு - பெரியநீலாவணை 01 ஐச் சேர்ந்த தமிழ்ப்பொதுமகன் மட்டுநகர் சிறிலங்கா இராணுவத்தினர் மேற்கொண்ட தாக்குதலின் போது வேப்பவெட்டுவான் பகுதியில் படுகொலை செய்யப்பட்ட கூலித்தொழிலாளி ஆகிய 02 தமிழர்கள். களுவாஞ்சிக்குடிப்பகுதியில் கைது செய்யப்பட்டு சுட்டுக் கொல்லப்பட்ட 14 தமிழர்கள்.

முல்லைத்திவு - வற்றாப்பளைப் பகுதியில் சிறிலங்கா விமானப்படையினர் மேற்கொண்ட உலங்குவானூர்தித் தாக்குதலில் கொல்லப்பட்ட 02 தமிழ்ச்சிறுவர்கள்.

யாழ் - வேலணை மேற்கில் சிறிலங்கா விமானப் படையினர் உலங்குவானூர்தியிலிருந்து மேற்கொண்ட துப்பாக்கிச் சூட்டில் கொல்லப்பட்ட தமிழ்ப்பெண்.

1992ஆம் ஆண்டு யாழ்- பண்டத்தரிப்பில் சிறிலங்கா இராணுவத்தினருடனான சமரில் வீரச்சாவெய்திய

**சேகர்** [தங்கராசா சிறிஸ்கந்தராசா - சுப்பர்மடம் - பருத்தித்துறை]

ஆகியோரை இந்நாளில்
நினைவு கூருகின்றோம்

★ இக்குறியிடப்பட்ட மாவீரர்கள் ஈரோஸ் அமைப்பு இயங்கிய காலத்தில் அதனுடன் இணைந்து செயற்பட்டவர்களாவர்.

**தமிழீழ விடுதலைப் புலிகள்**

(சி-7283)

சிந்தனைக்கு

நரி பொறியை குறை கூறும் தன்மையல்ல

- வில்லியம் பிளேக்

ஈழநாதம்

31, மகேந்திரா வீதி, யாழ்ப்பாணம் 26 08 1993

தொலைபேசி

ஆசிரியபீடம் 025-2839 நிர்வாகபீடம் 202:

த. பெ. எண்-05

## பழிசுமக்க தேவை ஒரு தலை

மண்கிண்டிமலை இராணுவ முகாமை விடுதலைப் புலிகளிடம் பறிகொடுத்தமை தொடர்பாக வடபகுதி இராணுவத் தளபதிகள் மீது இராணுவ நீதிமன்றத்தில் விசாரணைகள் மேற்கொள்ளப்படவுள்ளன. இதன் அடிப்படையில் தவறிழைத்த இராணுவ அதிகாரிகள் மீது கடும் ஒழுங்கு நடவடிக்கை மேற்கொள்ளப்படலாம் எனவும் இராணுவத் தளபதி லெப். ஜெனரல் சிசில் வைத்தியரெட்னா தெரிவித்துள்ளார்.

இந்தவகையில்வடபகுதி இராணுவத்தளபதிமேஜர் ஜெனரல் தலுவத்த மணலாற்றுப் பிரதேச - வெலிஓயா இராணுவத்தளபதி பிரிகேடியர் லியனகே, மண்கிண்டிமலை இராணுவத்தளபதி மேஜர் ஜே. ஏ. மசாகாரா ஆகிய அதிகாரிகள் உட்பட மேலும் பல கனிஷ்ட நிலை அதிகாரிகளும் இராணுவ நீதிமன்றத்தில் விசாரணைக்கு உட்படுத்தப்படவுள்ளனர். அதாவது இவ் விடயத்தில் இராணுவத்திலுள்ள இரண்டாம் நிலை அதிகாரிகளும், கனிஷ்ட நிலை அதிகாரிகளும் இதில் சிக்கவுள்ளனர்.

இவ் இராணுவ அதிகாரிகள் மீது பல குற்றச்சாட்டுக்களை மண்கிண்டிமலை இராணுவமுகாம் தாக்குதல் குறித்து விசாரணை செய்த இராணுவ விசாரணைக்குழு சுமத்தியுள்ளபோதும் அதிகாரிகள் களப்பிரதேசத்தில் இல்லை என்பதும், பாதுகாப்பு ஏற்பாடுகளை சீராகக் கவனிக்கவில்லை என்பதுமே பிரதான குற்றச்சாட்டாகும்.

இராணுவ விசாரணைக்குழு சுமத்தியுள்ள இக் குற்றச்சாட்டுகள் வெளிப்பார்வைக்கு ஏற்புடையது போல் தென்படினும், நடைமுறையில் இக் குற்றச்சாட்டு எந்தளவிற்கு பொருத்தமானவை என்பது கேள்விக்குரியதே ஆகும். ஏனெனில் மண்கிண்டிமலை முகாமின் வீழ்ச்சி என்பது புலிகளின் தாக்குதல் வேகத்திற்கும், திறனுக்கும் கிடைத்த வெற்றியேயொழிய இராணுவத்தின் அசிரத்தையாலும், அக்கறையீனத்தாலும் கிடைத்த தோல்வி அல்ல.

மண்கிண்டிமலை மீதான தாக்குதல் சுமார் 30 நிமிட நேரம் மட்டுமே இடம்பெற்றது. இராணுவத்தினர் கல்லெறி தூரத்தில் இருந்த முகாம்களுக்கு தகவல் அனுப்ப முன்னரே முகாம் புலிகளின்வசம் வீழ்ந்து விட்டது. இந் நிலையில் வடபகுதித் தளபதி பலாலியிலோ, அன்றி வவுனியாவிலோ தங்கி

# ஐ.ஐ.தே.கவை கலைத்தபின் ஐ.தே.கவுடன் சேரலாம்

## ஜே. ஆர். ஜெயவர்த்தனா

(கொழும்பு)

ஐ.தே. கவுடன் இணைவதற்கு முன்பாக ஜனநாயக ஐக்கிய தேசிய முன்னணி கலைக்கப்படல் வேண்டும் இவ்வாறு முன்னாள் ஜனாதிபதி ஜே. ஆர். ஜெயவர்த்தனா கூறியுள்ளார்.

கொழும்பிலிருந்து வெளிவரும் ஆங்கில வார இதழ் ஒன்றுக்கு பேட்டியளித்த அவர் மேலும் கூறுகையில், ஐ.தே.கவின் கொள்கைகளோடு இசைந்து போகக்கூடிய எவரும் அக்கட்சியில் சேர்ந்து கொள்ள முடியும் அதன்படி ஜனநாயக ஐக்கிய தேசிய முன்னணியினர் தமது கட்சியைக் கலைத்து விட்ட பின்பு தனித்தனி நபர்களாக ஐ. தே.கவுடன்சேர்ந்து கொள்வதே நல்லது அது தொடர்பாக எனக்கு முரண்பாடோ அல்லது ஐ.தே.கவில் சர்வாதிகாரம் நிலவுகிறது என்றோ நான் கருதவில்லை ஆனால் அதற்காக சிலர் பதவியை இராஜினாமாச் செய்து இவர்கள் பாராளுமன்றத்தினுள் நுழைய வசதி செய்து கொடுக்க வேண்டும் என்று கருதுவது பொருத்தமற்றது அப்படிச் செய்ய யார் முன்வரக்கூடும்? எவ்வாறாயினும்ஜ ஐ தே.மு ஐ.தே.கவிலிருந்து வெளியேறியபோரால் ஆரம்பிக்கப்பட்ட ஒன்றேயாகும். ஐ.தே.கவின் முக்கிய உறுப்பினர் ஒருவர் என்னிடம் கூறியது போல இவர்கள் வரிசைக்கிரமத்தில் வரட்டும் நான் எப்போதும் கட்சிக்கு விசுவாசமாக இருக்க வேண்டும் என்பதையே எதிர்பார்ப்பவன் லலித் அத்துலத்முதலி, காமினி திசாநாயக்கா போன்றோரின் செயல்கள் தவறான பாதையில் இருக்கின்றன என்று அப்போதே சுட்டிக்காட்டியிருந்தேன். அவர்களின் செயற்பாட்டினால் கட்சி பலவீனமுறும் என்றும் கட்சித் தலைமையுடனான முரண்பாடுகளை கட்சி மட்டத்திற்குள்ளேயே தீர்த்துக் கொள்ளுமாறும் நான் கூறியிருந்தேன்.

## ஜனாதிபதி விஜயதுங்க பட்ஜெட் தாக்கல் செய்வார்

(கொழும்பு)

ஜனாதிபதி டி. பி. விஜயதுங்க நிதி அமைச்சர் என்ற வகையில் அடுத்த ஆண்டிற்கான வரவு செலவுத் திட்டத்தை எதிர்வரும் நவம்பர் பத்தாம் திகதியன்று பாராளுமன்றத்தில் தாக்கல் செய்யவுள்ளார்.

ஜனாதிபதியாக பதவி வகிக்கும் விஜயதுங்க, நிதி, பாதுகாப்பு, புத்தசாசனம், கொள்கைத் திட்டமிடல் போன்ற பல அமைச்சுக்களையும் தம் வசம் வைத்திருப்பது தெரிந்ததே.

அரசியலமைப்பின் 32(iii)-ம் பிரிவிற்கு இணங்க ஜனாதிபதி ஒருவர் பாராளுமன்றத்தில் உரை நிகழ்த்தவும் அதிகாரம் அளிக்கப்பட்டிருப்பதை பயன்படுத்திய ஜனாதிபதி டி.பி. விஜயதுங்க வரவு செலவுத் திட்டத்தை தாக்கல் செய்ய இருக்கின்றார்.

சபாநாயகரின் ஆசனத்திலிருந்து ஜனாதிபதி பட்ஜெட் உரையை நிகழ்த்துவதற்கு ஏதுவாக பாராளுமன்றத்தின் நிலையியற் கட்டளை (47) நவம்பர் 10ம் திகதியன்று தளர்த்தப்பட்டிருக்கும் என்று சிரேஷ்ட அமைச்சர் ஒருவர் தெரிவித்துள்ளார்.

ஜனாதிபதி ஒருவர் வரவு செலவுத் திட்டத்தை பாராளுமன்றத்தில் தாக்கல் செய்ய இருப்பது இதுவே முதற்தடவையாகும் என்பது குறிப்பிடத்தக்கது.

## காமினியை மட்டும் இணைக்க ஐ.தே.கமுடிவு செய்துள்ளது?

(கொழும்பு)

ஜனநாயக ஐக்கிய தேசிய முன்னணியின் தலைவர் காமினி திசநாயக்காவை மட்டும் மீண்டும் அந்தஸ்துடன் ஐ.தே.கவில் இணைத்துக் கொள்வது என்றும், ஏனைய ஜ.ஐ.தே.மு வினரைச் சாதாரண உறுப்பினர்களாகவே சேர்த்துக் கொள்வது என்றும் ஐ.தே.க செயற்குழு முடிவு செய்துள்ளது.

ஜ. ஐ. தே. முகவையும், ஐ.தே. கவையும் மீண்டும் இணைப்பதில் காமினி திசாநாயக்கா தமது கட்சியினரிடமிருந்து பலத்த எதிர்ப்பை எதிர் நோக்கியிருப்பதாகவும், அவரை மட்டும் இணைத்துக் கொள்ளும் ஐ.தே.கவின் முடிவு காமினியை மேலும் தனிமைப் படுத்தியிருப்பதாகவும் கூறப்படுகின்றது.

இதேவேளை பலம் வாய்ந்த ஐ.தே.க முக்கியஸ்தர்கள் சிலர் மேலும் கூறுகையில் காமினிக்கோ அல்லது வேறு எவருக்குமோ முக்கிய பொறுப்பான பாதுகாப்பு, நிதி போன்றவை வழங்கப்பட மாட்டாது எனத் தெரிவித்துள்ளனர்.

அத்துடன் கட்சியைக் கலைக்காத வரையில் ஜ.ஐ.தே.முவை சேர்ப்பதில் ஐ.தே.க அரசு ஆர்வம் காட்டாது என்றும் கூறப்படுகின்றது.

## இன்று பரீட்சை

[யாழ்ப்பாணம்]

தேசிய தராதர ஆங்கிலப் பரீட்சை இன்று யாழ்ப்பாணத்தில் ஆறு பரீட்சை நிலையங்களில் நடைபெறவுள்ளதாக யாழ் கல்வித்திணைக்கள வட்டாரங்கள் தெரிவித்தன.

உள்ளூராட்சித் தேர்தல் குறித்து

## தமிழ்க் குழுக்களின் கருத்து; அமைச்சர் கண்டனம்

(கொழும்பு)

கிழக்கு மாகாணத்திலும் வவுனியா நகரிலும் உள்ளூராட்சித் தேர்தலை நடாத்துவதற்கு தமிழ்க் குழுக்கள் தெரிவித்த எதிர்ப்பிற்கு சிறிலங்காவின் புதிய மாகாணசபை உள்ளூராட்சி அமைச்சர் ஜோன் அமரதுங்கா கண்டனம் தெரிவித்துள்ளார்.

''சிவில் நிர்வாகத்தில் மக்கள் காட்டிவரும் அக்கறையினால் தாம் தேர்தலை நடத்த முற்படுகிறோமே தவிர, உலக நாடுகளுக்கு பிழையான கருத்தைக் கொடுப்பதற்காக அல்ல'' என அவர் குறிப்பிட்டார்.

மேலும் ''இவ்வாறு வெளிநாடுகளுக்கு காட்டுவதன் மூலம் எந்த ஒரு பலனையும் அரசாங்கம் பெறமுடியாது'' என அவர் தெரிவித்தார்.

## போரை உடன் நிறுத்த ஐ.நா. உதவி கோருக

(கொழும்பு)

இலங்கை உள்நாட்டுப் போரை உடனடியாக நிறுத்தி இனப்பிரச்சினைக்கான அடிப்படைக் காரணிகளுக்கு துரித தீர்வொன்றைக் காணுமாறும் இந்த முயற்சியில் ஐ.நா சபையின் மத்தியஸ்தத்தை நாடுமாறும் கடந்த வாரம் கொழும்பில் கூடிய சுயாதீன சர்வதேச அமைப்புகள் பலவற்றின் பிரதிநிதிகளும் கல்விமான்களும் இலங்கை அரசிடம் கோரிக்கை விடுத்திருக்கிறார்கள்.

இலங்கை மன்றக் கல்லூரியில் நடைபெற்ற கருத்தரங்கிலேயே மேற்படி கோரிக்கை விடுக்கப்பட்டது.

நாட்டின் தற்போதைய நெருக்கடிகளுக்கு தீர்வு காண ஐ.நா சபை செயலாளர் நாயகத்தின் மத்தியஸ்தத்தை இலங்கை பயன்படுத்த வேண்டுமென்று கோரும் ஆவணத்தில் பல பிரதிநிதிகள் கைச்சாத்திட்டிருக்கிறார்கள்.

தீவிரம் அடைந்துவரும் இனப்பிரச்சினை- ஆயுதப்போராட்டம் ஆகியவற்றின் விளைவாக உள்நாட்டிலேயே முன்னெருபோதும் இல்லாதவாறு அகதிகள் தொகை அதிகரித்து வருவதாகவும், சில பிரச்சினைகளில் ஐ.நா ஆயுதத்தலையீடுகள் பாரபட்சமாக இருந்ததாகவும் கவலை தெரிவிக்கப்பட்டது.

மக்களை இடம்பெயரவைப்பது ஒரு மனித உரிமை மீறல் என்றும் இவ்விதம் இடம்பெயர்ந்தோரின் சகல நலன்களையும் கவனிப்பது ஐ. நா. ஸ்தாபனத்தின் கடமையாகும் எனவும் வலியுறுத்தப்பட்டது. மேலும் அரசு உடனடி யுத்த நிறுத்தத்தை கடைப்பிடித்து பிரச்சினைகளுடன் சம்பந்தப்பட்ட சக்திகளுடன் பேசி தீர்வு ஒன்றைக் காண வேண்டுமெனவும் குறிப்பிடப்பட்டது.

இந்தக் கருத்தரங்கில் சர்வதேச செஞ்சிலுவைச்சங்க கமிட்டி, நோர்வே அகதிகள் பேரவை, மனித உரிமைகள் நிலையம், அகதிகளுக்கான ஐ.நா. உயர் ஸ்தானிகரகம் மகளிர் அமைப்புகள், பல்கலைக்கழக பேராசிரியர்கள் கலாநிதிகள், தொழில்சார் நிபுணர்கள் பலரும் கலந்து கொண்டு கருத்துரை வழங்கினர்.

## தேசிய அரசாங்கம் அமைத்து பிரச்சினைக்கு தீர்வுகாணுங்கள்

[கொழும்பு]

வடக்கு-கிழக்கு பிரச்சினைக்கு தீர்வுகாண வேண்டுமாயின் ஒரு வருடகாலத்திற்காயினும் தேசிய அரசாங்கம் ஒன்றை அமைத்து பிரச்சினைகளுக்கு தீர்வு காணுமாறு அரசாங்கத்தையும் ஏனைய அரசியல் கட்சிகளையும் கேட்டுக் கொள்கிறேன்.

இவ்வாறு சர்வோதயத் தலைவர் ஏ.ரி. ஆரியரத்தின கம்புறுகமுவவில் இடம்பெற்ற கூட்டமொன்றில் பேசும்போது குறிப்பிட்டார்.

## ஈராக்இராஜதந்திரிகள் இருவர் லண்டனில் புகலிடம்கோரினர்

(லண்டன்)

ஈராக்கின் இராஜதந்திரிகள் இருவர் பிரிட்டனுக்குத் தப்பி ... செயற்படும் ஈராக்தேசிய காங்கிரஸுடன் இணைந்து செயற்படுவர் எனவும் தெரி

பழனி, ரொணிர்போட்டை கொகுகிகளில்

## மத்திய துணைப் படையினர்

ரணைக்குழு சுமத்தியுள்ளபோதும் அதிகாரிகள் களப்பிரதேசத்தில் இல்லை என்பதும், பாதுகாப்பு ஏற்பாடுகளை சீராகக் கவனிக்கவில்லை என்பதுமே பிரதான குற்றச்சாட்டாகும்.

இராணுவ விசாரணைக்குழு சுமத்தியுள்ள இக் குற்றச்சாட்டுகள் வெளிப்பார்வைக்கு ஏற்புடையது போல் தென்படினும், நடைமுறையில் இக் குற்றச்சாட்டு எந்தளவிற்கு பொருத்தமானவை என்பது கேள்விக்குரியதே ஆகும். ஏனெனில் மண்கிண்டிமலை முகாமின் வீழ்ச்சி என்பது புலிகளின் தாக்குதல் வேகத்திற்கும், திறனுக்கும் கிடைத்த வெற்றியேயொழிய இராணுவத்தின் அசிரத்தையாலும், அக்கறையீனத்தாலும் கிடைத்த தோல்வி அல்ல.

மண்கிண்டிமலை மீதான தாக்குதல் சுமார் 30 நிமிட நேரம் மட்டுமே இடம்பெற்றது. இராணுவத்தினர் கல்லெறி தூரத்தில் இருந்த முகாம்களுக்கு தகவல் அனுப்ப முன்னரே முகாம் புலிகளின்வசம் வீழ்ந்து விட்டது. இந் நிலையில் வடபகுதித் தளபதி பலாலியிலோ, அன்றி வவுனியாவிலோ தங்கியிருந்தாலோ, அன்றி மணலாறு மாவட்டத் தளபதி வெலிஓயா முகாமில் தங்கியிருந்தாலோ மட்டும் எவ்வாறு தாக்குதலைத் தவிர்த்திருக்க முடியும். முகாம் வீழ்ச்சி அடையாமல் எவ்வாறு பாதுகாத்திருக்க முடியும்.

அடுத்ததாக களத்தில் நின்ற கனிஷ்ட நிலை அதிகாரிகள் திருப்பித் தாக்குதலை நடத்துவதற்கு படையினரைத் திரட்டவில்லை என்ற குற்றச்சாட்டும் இவ்வாறான தொன்றே. தாக்குதலின் வேகம், தாக்குதல் எவ்வாறு நடைபெறுகின்றது என்பதை அதிகாரிகள் தீர்மானிக்கும் முன்னரே முகாம் புலிகளின் கையில் வீழ்ந்து விட்டது. சிப்பாய்கள் பெரும்பாலானோர் இறந்துவிட்டனர், பலர் காயங்களுடன் தப்பி ஓடிவிட்டனர். ஓடியவர்களைக் கண்டுபிடிக்கவே மூன்று நாட்கள் சென்றன. இந் நிலையில் ஆட்களைத் திரட்டுவதென்பதும், தாக்குதல் தொடுப்பதென்பதும் எவ்வாறு சாத்தியமாகும். அதுவும் கூலிக்காகப் போராடும் இராணுவத்திடம் எவ்வாறு எதிர்பார்க்க முடியும்

இவ்வாறு இல்லாமல் முகாமின் இட அமைப்பு, அமைக்கப்பட்டுள்ள முறை, அதன் பாதுகாப்பு முறை என்பன தொடர்பான குற்றச்சாட்டுகள் சுமத்தப்படுவதானால் தனியாக தற்போதைய வடபகுதி தளபதி மீதோ, அன்றி மணலாறு, மண்கிண்டிமலை பொறுப்பதிகாரிகள் மீதோ முழுமையாகக் குற்றம் சாட்டுவது தவறாகும். ஏனெனில் இம் முகாம்கள் யாவும் தமிழர் தாயகத்தை துண்டாடும் மூலதந்திரோபாயத்தின் அடிப்படையில் அமைக்கப்பட்டவை, அவ்வாறானால் கொல்லப்பட்ட லெப். ஜெனரல் கொப்பேகடுவ, தற்போதைய இராணுவத் தளபதி லெப். ஜெனரல் சிசில் வைத்தியரெட்னா, கூட்டுப்படை நடவடிக்கைத் தளபதி ஜெனரல் ஹமில்டன் வனசிங்கா உட்பட பலர் இதற்கான பொறுப்பை ஏற்கவேண்டும்.

இந் நிலையில் வடபகுதி அதிகாரிகள் மீது குற்றச்சாட்டை சுமத்துவதுதென்பது இராணுவ உயர் தலைமைப்பீடத்தில் உள்ள முரண்பாட்டின் வெளிப்பாடாகும் இது தோல்விக்கான பழியை கீழுள்ள அதிகாரிகளின் தலையில் சுமத்திவிடும் ஒருவகை கேவலமான நடவடிக்கையுமாகும். மண்கிண்டிமலை முகாம் வீழ்ச்சி கண்டபின்னர் ஜனாதிபதி விஜயதுங்கா கூட்டிய மாநாட்டிலேயே பழியை மற்றவர் மீது சுமத்துவதில் உயர் இராணுவத்தளபதிகள் முட்டிமோதிக்கொண்டனர். இதன் உச்சக்கட்ட வெளிப்பாடே இன்று இரண்டாம்மட்ட தளபதிகள் மீதும், கனிஷ்ட நிலை அதிகாரிகள் மீது குற்றச்சாட்டை தள்ளிவிடும் முயற்சிகளாகும். ஆனால் மணகிண்டிமலை இராணுவ முகாமின் வீழ்ச்சி என்பது புலிகளின் துணிவிற்கும், ஆற்றலுக்கும் கிடைத்த வெற்றி என்பதை உயர் அதிகாரிகள் சகலரும் அறிவர்.

---

ஏனைய ஐ.ஐ.தே.மு வினரைச் சாதாரண உறுப்பினர்களாகவே சேர்த்துக் கொள்வது என்றும் ஐ.தே.க செயற்குழு முடிவு செய்துள்ளது.

ஐ. ஐ. தே. முகவையும், ஐ.தே. கவையும் மீண்டும் இணைப்பதில் காமினி திசாநாயக்கா தமது கட்சியினரிடமிருந்து பலத்த எதிர்ப்பை எதிர் நோக்கியிருப்பதாகவும், அவரை மட்டும் இணைத்துக்

சிலர் மேலும் கூறுகையில் காமினிக்கோ அல்லது வேறு எவருக்குமோ முக்கிய பொறுப்பான பாதுகாப்பு, நிதி போன்றவை வழங்கப்பட மாட்டாது எனத் தெரிவித்துள்ளனர்

அத்துடன் கட்சியைக் கலைக்காத வரையில் ஐ.ஐ.தே. முவை சேர்ப்பதில் ஐ.தே.க அரசு ஆர்வம் காட்டாது என்றும் கூறப்படுகின்றது.

மறும் நான் கூறியிருந்தேன்.

---

## இன்று பரீட்சை

[யாழ்ப்பாணம்]

தேசிய தராதர ஆங்கிலப் பரீட்சை இன்று யாழ்ப்பாணத்தில் ஆறு பரீட்சை நிலையங்களில் நடைபெறவுள்ளதாக யாழ் கல்வித்திணைக்கள வட்டாரங்கள் தெரிவித்தன.

---

## தேசிய அரசாங்கம் அமைத்து பிரச்சினைக்கு தீர்வுகாணுங்கள்

[கொழும்பு]

வடக்கு–கிழக்கு பிரச்சினைக்கு தீர்வுகாண வேண்டுமாயின் ஒரு வருடகாலத்திற்காயினும் தேசிய அரசாங்கம் ஒன்றை அமைத்து பிரச்சினைகளுக்கு தீர்வு காணுமாறு அரசாங்கத்தையும் ஏனைய அரசியல் கட்சிகளையும் கேட்டுக் கொள்கிறேன்.

இவ்வாறு சர்வோதயத் தலைவர் ஏ.ரி. ஆரியரத்தின கம்புறுகமுவையில் இடம்பெற்ற கூட்டமொன்றில் பேசும்போது குறிப்பிட்டார்.

---

## ஈராக் இராஜதந்திரிகள் இருவர் லண்டனில் புகலிடம் கோரினர்

(லண்டன்)

ஈராக்கின் இராஜதந்திரிகள் இருவர் பிரிட்டனுக்குத் தப்பியோடி அங்கு அரசியல் புகலிடம் கோரியுள்ளனர் பி.பி.ஸி தொலைக்காட்சி இது பற்றி மேலும் கூறுகையில், இந்த இரு ராஜதந்திரிகளும் ஏன் தப்பியோடினோம் என்பது தொடர்பாக லண்டனில் செய்தியாளர் மாநாடு ஒன்றில் விளக்கம் அளிக்கக் கூடும் எனவும் லண்டனில் செயற்படும் ஈராக் தேசிய காங்கிரஸுடன் இணைந்து செயற்படுவர் எனவும் தெரிவித்தது.

இந்த இருவரும் மேற்கு நாடுகளில் ஈராக்கிய தூதுவர்களாக பணியாற்றியவர்கள் எனவும், வளைகுடா யுத்தத்தின் பின்னர் ஈராக் மீண்டும் ஆயுதபாணியாவதற்கு எடுக்கும் முயற்சிகள் பற்றி நன்கு அறிந்தவர்கள் எனவும் மேலும் கூறப்படுகிறது.

## நைஜீரியா அதிபர் பாபன்கிடா இன்று பதவி துறக்கக் கூடும்

(நைரோபி)

நைஜீரியாவின் இராணுவ ஆட்சியாளர் ஜெனரல் பாபன்கிடா இன்று பதவி துறப்பார் என்று எதிர்பார்க்கப்படுகிறது பதவி விலகுவதற்காக விதிக்கப்பட்ட காலக்கெடு பூர்த்தியடைவதற்கு ஒருநாள் முன்பாக அவர் பதவி விலக இருக்கின்றார். அவர் இன்று நாட்டு மக்களுக்கு வானொலி மூலம் பிரியாவிடை உரை நிகழ்த்துவார் என்று அதிகாரிகள் கூறியுள்ளனர்.

அத்துடன் இன்றே இடைக்கால நிர்வாக அரசு பதவியேற்கும் எனவும் எதிர்பார்க்கப்படுகிறது. சிவில் நிர்வாக அரசை ஏற்படுத்தும் நடவடிக்கையை ஜெனரல் பாபன்கிடா தாமதித்து வந்ததைத் தொடர்ந்து அங்கு அரசியல் நெருக்கடிகள் ஏற்பட்டிருந்தது தெரிந்ததே. ஜூன் மாதம் நடைபெற்ற தேர்தலை ஜெனரல் பாபன்கிடா நிராகரித்திருந்ததும், அத் தேர்தலில் வர்த்தக பிரமுகரான மசூத் அபியுல்லா வெற்றி பெற்றிருந்தார் என்பதும் தெரிந்ததே.

---

## அன்னை திரேசா உடல்நலம் தேறுகிறார்

(டில்லி)

புதுடில்லியில் இருக்கும் அகில இந்திய மருத்துவ விஞ்ஞானக் கழக மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டிருக்கும் அன்னை திரேசாவின் உடல் நலம் சீராக இருப்பதாக அறிவிக்கப்பட்டுள்ளது தொடர்ந்தும் அதிதீவிர சிகிச்சைப் பிரிவின் கண்காணிப்பின்கீழ் இதய நோய்க்கு சிகிச்சை பெற்று வரும் அன்னை திரேசா நல்ல ஓய்வு எடுத்ததாகவும், அவருக்கு காய்ச்சல் எதுவும் இருக்கவில்லை எனவும் மேலும் கூறப்பட்டுள்ளது

## ரஷ்ய அதிபர் யெல்ட்சின் போலந்து பயணம்

(வார்சோ)

ரஷ்ய அதிபர் பொறிஸ் யெல்ட்சின் போலந்துக்கான உத்தியோகபூர்வ பயணம் ஒன்றை மேற்கொண்டுள்ளார். முன்னர் கம்யூனிச அணியிலிருந்த இவ் இரு நாடுகளுக்கும் இடையே பொருளாதார ஒத்துழைப்பை பலப்படுத்துவதே இவ் விஜயத்தின் நோக்கம் என்று சொல்லப்படுகிறது.

ரஷ்ய ஜனாதிபதி பொறிஸ் யெல்ட்சின், போலந்து அதிபர் லேக் வலேசாவுடன் பேச்சுக்களை நடத்தியுள்ளார் என்றும் முன்னைய கசப்புணர்வுகளை மறந்து நல்லுறவில் புதிய அத்தியாயம் ஒன்றை ஏற்படுத்த எண்ணியுள்ளனர் என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

---

பழனி, ராணிப்பேட்டை தொகுதிகளில்

# மத்திய துணைப் படையினர் பணியில் ஈடுபடுத்தப்பட வேண்டும்

## தேர்தல் ஆணையம் அறிவிப்பு

(சென்னை)

பழனி மக்களவைத் தொகுதியிலும், ராணி பேட்டை சட்ட மன்றத் தொகுதியிலும் இம்மாதம் 31-ம் திகதிக்கு முன்பாக மத்திய ரிசர்வ் படையினர் பணியில் ஈடுபடுத்தப்படல் வேண்டும் என்று தேர்தல் ஆணையம் கூறியுள்ளது.

நேற்று முன்தினம் தேர்தல் ஆணையத்தின் துணை ஆணையர் பகார் மத்திய உள்துறை செயலாளருக்கும், மாநில தலைமைச் செயலாளருக்கும் எழுதியுள்ள கடிதம் ஒன்றில் இதனைத் தெரிவித்துள்ளார். இக் கடிதத்தில் மேலும் இத்தொகுதிகளில் பரவலாக மத்திய துணை இராணுவப்படையினர் பணியில் ஈடுபடுத்தப்பட்டுள்ளனர் என்ற உணர்வு ஏற்படும் வகையில் பரவலாக அவர்கள் நிறுத்தப்பட வேண்டும் எனவும் ஓரிடத்திலிருந்து மற்றோரிடத்துக்குச் செல்வதற்கு உத்தரவாதம் இருக்கவேண்டும்எனவும். பணியில் ஈடுபடுத்தப்படும் படைப்பிரிவின் பலம் குறைவாக இருக்கிறது என்ற உணர்வு தோன்றாத வகையில் அவர்கள் பணியில் அமர்த்தப்பட வேண்டும் எனவும் கோரப்பட்டுள்ளது.

தேர்தல் ஆணையத்தின் இந்த வழிகாட்டுதல்கள் சரிவர அமுல்படுத்தப்பட்டு துணை இராணுவப் படையினர் பணியில் ஈடுபடுத்தப்பட்டு இம்மாதம் 31-ம் திகதிக்கு முன்பாக மத்திய மாநில அரசுகள் உறுதியாக தெரிவிக்கப்பட வேண்டும் எனவும் அக் கடிதம் வலியுறுத்தியுள்ளது.

## தலைவர்களுக்கு எதிரான நடவடிக்கைகளை கைவிடுக

### ஜெயலலிதா கோரிக்கை

ஜனதாக் கட்சித் தலைவர் சுப்பிரமணியம் சுவாமி மற்றும் தமிழக காங்கிரஸ் கட்சி தலைவர் வாழப்பாடி இராமமூர்த்தி போன்றோருக்கு எதிராக போராட்ட நடவடிக்கை எதிலும் இறங்க வேண்டாம் என்று அ.இ.அ.தி.மு.கவினரை முதல்வர் ஜெயலலிதா கேட்டுக் கொண்டுள்ளார்.

சென்னையில் நேற்று அவர் வெளியிட்ட அறிக்கையொன்றில் தமது கட்சியினர் தலைவர்களுக்கு எதிராக நடத்தி வரும் போராட்டங்கள் ஜனநாயக நெறிமுறைக்கு உட்பட்டவைதான் என்றாலும் சட்டம், ஒழுங்கு பிரச்சினையாகக் காட்ட முயற்சிகள் மேற்கொள்ளப்படுவதால் இத்தகைய நடவடிக்கைகளைக் கைவிடும்படி கோரிக்கை விடுத்துள்ளார்.

## பாரதீய ஜனதாக் கட்சியை அ.இ.அ.தி.மு.க. ஆதரிக்கிறது

### காங்கிரஸ் தெரிவிப்பு

அரசியலில் இருந்து மதத்தைப் பிரிப்பதற்காக கொண்டு வரப்பட்ட அரசியல் சட்ட திருத்த மசோதாவை எதிர்ப்பதன் மூலம் பாரதீய ஜனதாக் கட்சியை ஆதரிப்பதை தமிழக முதல்வர் ஜெயலலிதா பகிரங்கப்படுத்தியுள்ளார் என்று தமிழக காங்கிரஸ் கட்சியின் செய்தித் தொடர்பாளர் கிள்ளிவளவன் கூறியுள்ளார்.

---

## விவாதம் ஒத்திவைப்பு

(டில்லி)

அரசியலில் இருந்து மதத்தைப் பிரிப்பது என்னும் நோக்கத்துடன் கொண்டுவரப்பட்ட சட்ட மூலங்களை விவாதிப்பதை இந்தியப் பாராளுமன்றம் ஒத்திவைத்துள்ளது. இது தொடர்பாக ஏனைய கட்சிகளுடன் ஆலோசனை தொடரும் எனவும், அரசியலில் இருந்து மதத்தைப் பிரிப்பதில் காங்கிரஸ் உறுதியுடன் இருப்பதாகவும் உள்துறை இணை அமைச்சர் ராஜேஷ் பைலட் கூறியுள்ளார்.

## சீன வியட்நாம் பேச்சுகள் பீகிங்கில் ஆரம்பம்

(பீகிங்)

சீனாவும் வியட்நாமும் தமது பிரதேச பிரச்சினைகள் தொடர்பான பேச்சு வார்த்தைகளை ஆரம்பித்துள்ளன டான்கின் வளைகுடாவில் எண்ணெய் அகழ்வதற்கான உரிமை உட்பட பல்வேறு விடயங்கள் ஆராயப்படுள்ளன சீனாவின் துணை வெளிவிவகார அமைச்சரும் வியட்நாமிய துணை வெளிநாட்டமைச்சரும் இப் பேச்சுவார்த்தைகளை பீகிங்கில் ஆரம்பித்துள்ளனர்

சீனப் பிரதமர் லீபெங் அண்மையில் வியட்நாம் சென்றிருந்தபோது இப் பேச்சுக்கள் நடத்துவது தொடர்பாக இணக்கம் காணப்பட்டிருந்தது குறிப்பிடத்தக்கது.

ஈழநாதம்

காங்கேசன் சீமெந்து தொழிற்சாலை

# ஊழியர் சம்பளம் வழங்கும் நிலையில் திறைசேரி இல்லை

(கொழும்பு)

''காங்கேசன்துறை சீமெந்துக் கூட்டுத்தாபன ஊழியர்களின் சம்பளத்தை இப்போது திறைசேரி வழங்குகிறது. ஆனால் காலவரையறையின்றி இச் சம்பளத்தை வழங்கக்கூடிய நிலையில் திறைசேரி இல்லை'' என வீடமைப்பு நிர்மாணத்துறை அமைச்சர் சிறிசேனகுரே தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவிக்கையில், வடபகுதியின் தற்போதைய நிலைகாரணமாக காங்கேசன் சீமெந்துத் தொழிற்சாலை 1990 ஜூனில் உற்பத்தியை நிறுத்திக் கொண்டது இது செயற்படாத போதிலும் தொழிற்சாலை ஊழியர்களின் சம்பளத்தை சீமெந்துக் கூட்டுத்தாபனம் வழங்கியது. மாதாந்தம் 38 இலட்சம் ரூபா இவ்வாறு வழங்கப்பட்டது.

புத்தளம் சீமெந்துத் தொழிற்சாலை 1993 மே 11 இல் பொதுக் கம்பனியாக மாற்றியமைக்கப்பட்டமையால் காங்கேசன் தொழிற்சாலை மூடப்படும்வரையில் அதன் ஊழியர்களுக்கான சம்பளத்தை திறைசேரியே வழங்கவேண்டும் என அமைச்சரவை தீர்மானித்தது.

காங்கேசன்துறை சீமெந்து தொழிற்சாலை 40 வருடங்களுக்குமேல் பழமையானது என்பதுடன் அதன் இயந்திரசாதனங்களும் அதன்கால எல்லையைப் பூர்த்தி செய்யும் நிலையில் உள்ளன. மேலும் அண்மைக்காலத்தில் அவை மேலும் சேதமடைந்துள்ளன.

''எனவே இதனைத் புதுப்பிப்பதற்கோ, திருத்துவதற்கோ பெருமளவில் செலவிட வேண்டியிருக்கும். இயந்திர சாதனங்களின் தற்போதைய நிலைமையையும் அதனைப்புனரமைப்பதற்கு அல்லது திருத்துவதற்கு ஏற்படக்கூடிய செலவையும் கவனத்திலெடுத்துப் பார்க்கும்போது வழமைநிலை திரும்பியதற்குப் பின்னர் கூட குறிப்பிட்ட காலத்திற்கு இயங்கக் கூடிய நிலையில் இத் தொழிற்சாலை இல்லை'' என்றார்.

## ஓய்வூதியத்தை அதிகரிக்க கோருவதற்கு முடிவு

(யாழ்ப்பாணம்)

வடமாகாண அரசாங்க ஓய்வூதியர் சங்கம் தமக்கான ஓய்வூதியப் பணத்தை அதிகரிக்கும்படி சிறிலங்கா அரசின் ஆணைக் குழுவிற்கு கோரிக்கை விடுக்கவுள்ளனர்.

எதிர்வரும் ஞாயிற்றுக்கிழமை காலை 9 மணிக்கு யாழ். இந்துக் கல்லூரியில் வடமாகாண அரசாங்க ஓய்வூதியர் சங்க விசேட பொதுக் கூட்டம் நடைபெறவுள்ளது.

மேற்படி கூட்டத்திலேயே ஓய்வூதியம் பெறும் பணத்தைக் கூட்டித்தரும்படி, தற்போது அரசாங்கத்தால் நியமிக்கப்பட்டிருக்கும் ஆணைக் குழுவிற்கு ஓர் மகஜரை சமர்ப்பிக்க ஆலோசிக்கப்படவுள்ளதாக தெரியவருகிறது.

சகல ஓய்வூதியர்களையும் தவறாது கலந்து கொண்டு கருத்துக்களை தெரிவிக்குமாறு மேற்படி சங்க தலைவர் கேட்டுள்ளார்.

## பிரேமாவின் சொத்து 89 லட்சமென பிரகடனம்

(கொழும்பு)

மறைந்த ஜனாதிபதி ஆர். பிரேமதாஸவின் முழுச்சொத்துக்களின் பெறுமதி 89 லட்சம் ரூபா என பிரகடனப்படுத்தப் பட்டுள்ளது. திருமதி ஹேமா பிரேமதாஸ நீதிமன்றத்திற்கு சமர்ப்பித்த சொத்துக்கள் விபரப்பட்டியலில் இருந்து இது தெரியவந்துள்ளது

ஜனாதிபதி பிரேமதாஸவிற்கு இரண்டு வங்கிகளில் கணக்கு இருந்துள்ளது. அத்துடன் ஐந்து கார்கள், கொழும்பிலுள்ள இரு ஆடம்பர வீடுகள், விவசாயக் காணிகள் என்பனவும் பிரேமதாஸவின் சொத்துக்களில் அடங்கும். திருமதி பிரேமதாஸ நீதிமன்றிற்கு சமர்ப்பித்த சொத்துக்கள் விபரப்பட்டியலின் பிரகாரம் பிரேமதாஸவிற்கு இரு வங்கிகளில் 40லட்சம் ரூபா வைப்பிலிடப்பட்டுள்ளது.

பிரேமதாஸவின் கொழும்பிலுள்ள இரு வீடுகளின் பெறுமதி 10 லட்சம் ரூபாவாக குறிப்பிடப்பட்டுள்ளது இதைவிட கொழும்பிற்கு வெளியே அவருக்கு 52 ஏக்கர் காணிகளும் உண்டு என்றும் ஆடம்பர மெர்சடிஸ் பென்ஸ் கார் உட்பட ஐந்து வாகனங்கள் இருந்தன என்றும் தெரியவந்துள்ளது.

## வீரவணக்க கூட்டம்

தென்மராட்சிக் கோட்டம் கைதடி வட்டத்தில் 7ஆம், 8ஆம் மாதங்களில் வீரச்சாவடைந்த மாவீரர்களுக்கான வீரவணக்க கூட்டம் இன்று இரவு 7-30 மணிக்கு கைதடி தெற்கு சனசமூக நிலைய அரங்கில் நடைபெறவுள்ளது.

இக் கூட்டத்தில் விடுதலைப் புலிகள் உறுப்பினர்கள் கலந்து கொண்டு உரையாற்றவுள்ளனர் கலை பண்பாட்டு கழகத்தினரின் கலை நிகழ்ச்சிகளும் இடம்பெறும்.

## விசேட செயலமர்வு

வெளிமாவட்ட கணித, விஞ்ஞான ஆசிரியர்களின் வேண்டுகோளிற்கமைவாக யாழ் மாவட்ட கணித. விஞ்ஞான மூலவள நிலையத்தில் ஒழுங்கு செய்யப்பட்ட விசேட செயலமர்வு வரும் 30ஆம் திகதி திங்கட்கிழமை காலை 9.00 மணிக்கு ஆரம்பமாகும் என்பதை திருமதி வேதநாயகம் உதவிக் கல்விப் பணிப்பாளர் அவர்கள் அறிவித்துள்ளார்.

# மாகாண சபைக்கு மேலாக எதையும் வழங்க முடியாது

## ஜெயவர்த்தனா பேட்டி

(கொழும்பு)

''இனப்பிரச்சினை தீர்வுக்கு சிறந்த அடிப்படையாக இலங்கை-இந்திய ஒப்பந்தமே இருக்கின்றது. மாகாண சபைகள் மூலம் வழங்கப்பட்ட அதிகாரப்பரவலாக்கலுக்கு மேலாக எந்த அரசும் அதிகமாக வழங்கிவிடாது என்பதை தெரிந்துகொள்ள வேண்டும்.''

இவ்வாறு முன்னாள் ஜனாதிபதி ஜே.ஆர். ஜெயவர்த்தனா சண்டே ரைம்ஸ் பத்திரிகைக்கு அளித்த பேட்டியில் தெரிவித்துள்ளார். பேட்டியின்போது தாம் அரசுக்கு முக்கியமான விடயங்கள் குறித்து தற்போது ஆலோசனை வழங்கிவருவதாக வெளியான செய்திகளை அவர் மறுத்துரைத்தார்.

தமிழ்க் கட்சிகளும், இலங்கை தொழிலாளர் காங்கிரசும் வடக்கும்-கிழக்கும் இணைந்திருக்க வேண்டும் அல்லது இணைப்புக்குறித்து இருமாகாணங்களிலும் சர்வசன வாக்கெடுப்பு நடத்தவேண்டும் என்று கோருகின்றனரே எனக் கேட்டபோது. அவர்கள் விரும்பியவாறு கூறிக்கொண்டிருக்கட்டும் 1987 ஒப்பந்தத்தை எல்லா தமிழ்க் கட்சிகளும் ஏற்றுக்கொண்டன என்பதை நான் கூறுகிறேன் என்றார் ஜெயவர்த்தனா. அவர் தொடர்ந்து குறிப்பிடுகையில், 1987 ஒப்பந்தத்துடன் ஐந்து மாதங்கள் சமாதானம் நிலவியது ஒப்பந்தம் கைச்சாத்தானதும் இந்தியப் பிரதமர் ராஜீவ் காந்தி தாம் வேலுப்பிள்ளை பிரபாகரனை இலங்கைக்கு அனுப்பிவைப்பதாக எனக்கு அறிவித்தார். அத்துடன் நன் புலிகளின் ஆயுதங்களை பெற்றுக்கொள்வதற்காக ஜெனரல் ஆட்டிகலவை அனுப்பிவைத்தேன். ஒக்டோபரில் சில விடுதலைப்புலிகள் உறுப்பினர்கள் அவர்கள் மீதான சில குற்றச்சாட்டுகளின் பேரில் விசாரணைக்கு கொழும்புக்கு கொண்டுவர எடுத்த முயற்சியினால் அனைத்தும் குழம்பின. கைது செய்யப்பட்ட அந்த புலிகள் உறுப்பினர்கள் நஞ்சருந்தி மரணமாகினர். இது புலிகள் மீண்டும் இராணுவ நடவடிக்கையை ஆரம்பிப்பதற்கு காரணமாகிவிட்டது என்றார்.

இந்திய அமைதிப் படையை வரவழைத்தமை குறித்து இப்போதும் கண்டிக்கப்பட்டு வருகிறது ஐ. பி. கே எப் ஐ வரவழைப்பது வரவேற்கத்தக்க விடயமல்ல என்பதை நீங்கள் அப்போது உணரவில்லையா? பிரபாகரன் சமரசப் பேச்சிற்கு இணங்கா விட்டால், ஒப்பந்தத்தை ஏற்காவிட்டால் தாம் கவனித்துக் கொள்வதாக ராஜீவ் காந்தி என்னிடம் உறுதியளித்தார். பிரபாகரன் சமரசப் பேச்சை எம்முடன் நடத்த இணங்க மறுத்து ஒப்பந்தத்தையும் ஏற்க மறுத்தபோது ராஜீவ் காந்தி எமது படைகளுக்கு உதவியளிக்கவென இந்திய அமைதிப் படைகளை இலங்கைக்கு அனுப்பிவைத்தார் என்றார்.

இனப்பிரச்சினைக்கு தீர்வு

# நாம் காணாவிட்டால் வெளியார் தலையீடு ஏற்படும்

இனப்பிரச்சினைக்கு உள்நாட்டில் நாமாகவே தீர்வொன்றைக் காணாவிட்டால் வெளிநாட்டுச் சக்திகள் தலையீடு செய்யும் நிலை உருவாகலாம். முன்னாள் யூகோஸ்லாவியாவின் பொஸ்னியாவில் ஏற்பட்டிருக்கும் நிலை இலங்கையிலும் ஏற்படலாம்.

இவ்வாறு இலங்கைத் தொழிலாளர் காங்கிரஸ் பொதுச்செயலாளரும் கைத்தொழில் இராஜாங்க அமைச்சருமான எம் எஸ் செல்லச்சாமி பாராளுமன்றத்தில் கூறினார்.

இனப்பிரச்சினைக்கு தீர்வு காண்பது பற்றியே இவ்வளவு காலமும் நாம் பேசிக்கொண்டிருக்கிறோம் ஆனால் இதுவரை எந்தப்பயனும் ஏற்படவில்லை. இது ஒரு உள்நாட்டுப் பிரச்சினை என்று நாம் கூறுகின்றோம். அது உண்மைதான். எந்தவொரு வெளிநாட்டு இராணுவமும் படை எடுத்து ஆக்கிரமித்திருக்கவில்லை.

இனப்பிரச்சினைக்கு பேச்சுவார்த்தை மூலமே தீர்வொன்றைக் காணமுடியும். எமது பிரச்சினைக்கு நாமாகவே தீர்வொன்றைக் காணாவிட்டால் வெளிநாட்டுச் சக்திகள் தலையீடு செய்யலாம் என்று அவர் அவசரகால சட்டத்தை மேலும் ஒருமாதகாலத்திற்கு நீடிப்பதற்கான பிரேரணை மீது உரையாற்றிய போது குறிப்பிட்டார்.

சித்தாண்டிப் பகுதியில்

## தலைகள் துண்டிக்கப்பட்ட இளைஞர்களின் முண்டங்கள்

[மட்டக்களப்பு]

மட்டக்களப்பில் சித்தாண்டியில் அடிக்கடி தலைதுண்டிக்கப்பட்ட இளைஞர்களின்முண்டகள் வீதியில் கிடக்கின்றன. இதை சிறிலங்கா விசேட படையினரே மேற்கொண்டு வருகின்றனர். சித்தாண்டி இராணுவ முகாமில் உள்ள இந்த விசேடபடையினர் மோட்டார் சைக்கிளில் வீதி ரோந்தை மேற்கொள்கின்றனர்.

'மோட்டார் சைக்கிள் பார்ட்டி' என அப்பகுதி மக்களால் பீதியுடன் கூறப்படும் இப்படையினர் கைது செய்யும் இளைஞர்களே பின் தலை துண்டிக்கப்பட்டு வீதியில் போடப்படுகின்றனர்.

ரணிலுக்குகிடைக்கும்?

பாதுகாப்பிற்கான இராஜாங்க அமைச்சர் பதவி வெற்றிடத்தை நிரப்ப பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவே பொருத்தமான நபராக இருப்பதாக ஐ தே க. வட்டாரங்களில் கருதப்படுகிறது என கொழும்புச் செய்திகள் தெரிவிக்கின்றன.

யாழ். பாடசாலைகளுக்கிடையேயான

## விளையாட்டு போட்டிகளுக்கு விண்ணப்பிக்கலாம்

[நமது நிருபர்]

யாழ். மாவட்டப் பாடசாலைகளுக்கிடையிலான 1993 ற்கான விளையாட்டு விழா நடைபெறவுள்ளது. இதில் பங்குபற்ற விரும்பும் பாடசாலைகள், ஆசிரியர்கள், மாணவர்களிடமிருந்து இதற்கான விண்ணப்பங்கள் கோரப் பட்டுள்ளன. பங்குபற்ற விரும்புவோர் அதிதமது பாடசாலை அதிபருடாக தமது விண்ணப்பங்களை அடுத்துமாதம் பத்... பாளர் அருணகிரிராஜா கேட்டுள்ளார்.

பங்குபற்றும்ஆசிரியர் தனது பாடசாலை ஆசிரியர் என்பதையும் மாணவர்களின் விண்ணப்பங்களில் மாணவரது முழுப்பெயர், பிறந்த திகதி, கற்கும் வகுப்பு, கையெழுத்து போன்ற விபரங்களையும் அதிபர்கள் உறுதிப்படுத்தல் வேண்டும் எனவும் அவர் கேட்டுள்ளார்.

மேற்படி விளையாட்டுவிழா

## தபால் ஊழியர் போல் நான் செயற்படுகிறேன்

அரச அதிபர் தெரிவிப்பு

யாழ்ப்பாணத்திலிருந்து கொழும்பு வரும் ஒவ்வொரு தடவையும் குறைந்தது மூன்று பைகளில் தபால்களை எடுத்து வருகிறேன் இவ் வகையில் என்னிடம் வரும் விருந்தினர்களுக்கு ஒரு தபால் ஊழியர் போலவே செயற்பட வேண்டி... மக்களையும்போலவே பாஸ் பெற்றுத்தான் பயணம் செய்கிறேன். பன்முகப்படுத்தப்பட்ட வரவு செலவுத் திட்டத்தின் கீரான வேலைத் திட்டங்கள் மற்றும் ஜனசவிய திட்டங்கள் போன்றவை பற்றி அரசாங்க அலுவலகத்தில்

## உள்வந்த வெளிச்சென்ற வாகன இலக்கங்கள்

## அகதிகள்

பிரேமதாஸவின் முழுச்சொத்துக்களின் பெறுமதி 89 லட்சம் ரூபா என பிரகடனப்படுத்தப்பட்டுள்ளது. திருமதி ஹேமா பிரேமதாஸ நீதிமன்றத்திற்கு சமர்ப்பித்த சொத்துக்கள் விபரப்பட்டியலில் இருந்து இது தெரியவந்துள்ளது

ஜனாதிபதி பிரேமதாஸவிற்கு இரண்டு வங்கிகளில் கணக்கு இருந்துள்ளது. அத்துடன் ஐந்து கார்கள், கொழும்பிலுள்ள இரு ஆடம்பர வீடுகள், விவசாயக் காணிகள் என்பனவும் பிரேமதாஸவின் சொத்துக்களில் அடங்கும். திருரப்பட்டியலின் பிரகாரம் பிரேமதாஸவிற்கு இரு வங்கிகளில் 40லட்சம் ரூபா வைப்பிலிடப்பட்டுள்ளது.

பிரேமதாஸவின் கொழும்பிலுள்ள இரு வீடுகளின் பெறுமதி 10 லட்சம் ரூபாவாக குறிப்பிடப்பட்டுள்ளது இதைவிட கொழும்பிற்கு வெளியே அவருக்கு 52 ஏக்கர் காணிகளும் உண்டு என்றும் ஆடம்பர மெர்சடிஸ் பென்ஸ் கார் உட்பட ஐந்து வாகனங்கள் இருந்தன என்றும் தெரியவந்துள்ளது.

# உள்வந்த வெளிச்சென்ற வாகன இலக்கங்கள்

## 25-08-93

எமது பதிவில் உள்ள கடைசி இலக்கம்: 10674

வடபகுதிக்கு உள்ளே வந்த வாகன இலக்கங்கள்:

41-8617, 42-1293, 27-2088, 26-0403 27-6762
27-4023, 22-4895, 27-9033, 42-3329, 26-2108
24-4636, 42-3615, 26-5493, 26-4281, 42 3239
24-9758, 41-7865, 26-8419, 28-1636, 27-5197
28-0854.

வடபகுதிக்கு வெளியே சென்ற வாகன இலக்கங்கள்:

27-8999, 28-9449, 27-9756, 26-3528.

# தவறிவிட்டது

25-08-93 அதிகாலை அல்லிப்பளை இறங்கு துறையில் இருந்து பஸ் நிலையத்திற்கு செல்லுகையில் பிரயாணப் பை (நீலநிற கிட்பாக்) தவறிவிட்டது. கண்டெடுத்தவர்கள் ஈழநாதம் பத்திரிகை காரியாலயத்தில் அல்லது கீழ்க் காணும் முகவரியில் தயவுசெய்து ஒப்படைக்கவும் அல்லது தொடர்புகொள்ளவும். தகுந்த சன்மானம் வழங்கப்படும்.

பிள்ளையார் வீதி,
திருநெல்வேலி மேற்கு,
யாழ்ப்பாணம்.

சி. மதியாபரணம்,

(5777)

உடுப்பிட்டி அமெரிக்கன் மிஷன் கல்லூரி
பழைய மாணவர் சங்க வளர்ச்சிக்கான

# நிதியுதவி நிகழ்ச்சி
# பிற்போடப்பட்டுள்ளது

1993-08-28-ம் திகதி நடைபெற இருந்த "வானவில்" நிதியுதவி நிகழ்ச்சி தவிர்க்க முடியாத காரணத்தினால் 1993-09-04-ம் திகதி சனிக்கிழமை மாலை 6-30மணிக்கு பிற்போடப்பட்டுள்ளதென்பதனை அறியத்தருகின்றோம். திகதிமாற்றத்தால் ஏற்படும் சிரமத்திற்கு வருந்துகின்றோம்.

சி. கனகசபாபதி
செயலாளர்

(5774)

இப்பத்திரிகை யாழ்ப்பாணம் மகேந்திரா வீதி 81-ஆம் இலக்கத்திலுள்ள "ஈழநாதம்" பணிமனையில் 1993-ம் ஆண்டு ஆவணி மாதம் 26ஆம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது.

சகல ஒழுங்குகளையும் தவறாது கலந்து கொண்டு கருத்துக்களை தெரிவிக்குமாறு மேற்படி சங்க தலைவர் கேட்டுள்ளார்.

இலங்கையிலும் ஏற்படலாம். இவ்வாறு இலங்கைத் தொழிலாளர் காங்கிரஸ் பொதுச்செயலாளரும் கைத்தொழில் இராஜாங்க அமைச்

யாழ். பாடசாலைகளுக்கிடையேயான

# விளையாட்டு போட்டிகளுக்கு விண்ணப்பிக்கலாம்

[நமது நிருபர்]

யாழ் மாவட்டப் பாடசாலைகளுக்கிடையிலான 1993 ற்கான விளையாட்டு விழா நடைபெறவுள்ளது. இதில் பங்குபற்ற விரும்பும் பாடசாலைகள், ஆசிரியர்கள், மாணவர்களிடமிருந்து இதற்கான விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளன. பங்குபற்ற விரும்புவோர் தத்தமது பாடசாலை அதிபரூடாக தமது விண்ணப்பங்களை அடுத்தமாதம் பத்தாம் திகதிக்குமுன்னர் தனக்கு அனுப்பிவைக்குமாறு உடற்கல்வி உதவிக் கல்விப் பணிப்பாளர் அருணகிரிராஜா கேட்டுள்ளார்.

பங்குபற்றும்ஆசிரியர் தனது பாடசாலை ஆசிரியர் என்பதையும் மாணவர்களின் விண்ணப்பங்களில் மாணவரது முழுப்பெயர், பிறந்த திகதி, கற்கும் வகுப்பு, கையெழுத்து போன்ற விபரங்களையும் அதிபர்கள் உறுதிப்படுத்தல் வேண்டும் எனவும் அவர் கேட்டுள்ளார்.

மேற்படி விளையாட்டுவிழாவில் பட்மின்டன் (பூம்பந்து) மேசைப்பந்து, சதுரங்கச் சுற்றுப் போட்டி ஆகியன இடம் பெறவுள்ளன.

இதில் கலந்து கொள்வோரின் வயதெல்லை 31-12-93-ம் திகதியைக் கருத்தில் கொண்டு கணிக்கப்படும்எனவும்போட்டி தொடங்குவதற்கு முன்பே வீரர்கள் தமது வரவைப்பதிவு செய்தல் வேண்டும் எனவும் போட்டிக்கு / ஆட்டத்திற்கு தேவையான விளையாட்டு உபகரணங்களை போட்டியாளர் எடுத்து வருதல் வேண்டும் எனவும் தீர்ப்பாளரின் முடிவே இறுதியானது எனவும் உடற்கல்வி உதவிக் கல்விப் பணிப்பாளர் தெரிவித்துள்ளார்.

## வடபகுதி

எடுக்கப்படும்.

இராணுவ விசாரணைக்குழுவின் ஏனைய பிரதான கண்டுபிடிப்புகளாவன.

★ பதில் தாக்குதலுக்கான படையினரை அதிகாரிகள் தயார் செய்யவில்லை.

★ 15க்கும் மேற்பட்ட எதிரிகளை கொல்லக்கூடிய அரிய சந்தர்ப்பத்தை இராணுவத்தினர் தவறவிட்டனர்.

★ இராணுவ உளவுப்பிரிவு எச்சரித்திருந்த போதிலும் கவனமின்மையாக இருந்தமை.

★ ஆயுதங்களையும் வெடிமருந்துகளையும் பாதுகாப்பாக வைத்திருக்க அறிவுறுத்தப்பட்ட நடைமுறைகளையும் இராணுவ தலைமையகத்தினால் வழங்கப்பட்ட பணிப்புரைகளை மீறியமை என்பனவாகும்.

## விறகு

செய்யும் நோக்கோடு விறகு கொண்டுசெல்வதற்காக போக்குவரத்து அனுமதி பெறும் திட்டத்தை நடைமுறைப்படுத்த உள்ளதாகவும் இதன் மூலம் கிடைக்கும் நிதியிலிருந்து குறிப்பிட்ட இடங்களைத் தெரிவு செய்து மீள்மர நடுகையினை மேற்கொள்ள திட்டமிட்டுள்ளதாகவும், தமிழீழ பொருண்மிய மேம்பாட்டு நிறுவனத்தின் செய்திக்குறிப்பொன்று தெரிவிக்கின்றது.

மேலும் அச்செய்தியில் வாகனத்தில் விறகு கொண்டு செல்பவரிடத்தில் மாத்திரமே இந்நிதி அறவிடப்படுமெனவும் சைக்கிளில் விறகு கொண்டு செல்பவருக்கு இது பொருந்தாதெனவும் இவை தொடர்பான நடைமுறை விபரங்கள் பத்திரிகைகளில் வெளிவரும் எனவும் குறிப்பிட்டுள்ளது.

## உள்ளூராட்சி

யாது எனத்தெரிவித்திருந்தனர்.

இதேவேளை இத்தேர்தல்கள் நடத்தப்படுமானால் விடுதலைப் புலிகள் புதிய நடவடிக்கையில் இறங்கக் கூடும் என சிறிலங்கா அரசாங்கம் அஞ்சுவதாக செய்தியாளர்கள் தெரிவித்துள்ளனர்

மேலும் இத் தேர்தல்கள் எதிர்வரும் ஜனவரி மாதத்தில் நடைபெறலாம் என செய்திகள் தெரிவிக்கின்றன.

## யல்லேகல

இவர்கள் அனைவரும் வடமராட்சி கடற்பரப்பில்வைத்து கைது செய்யப்பட்டவர்கள் என்பது குறிப்பிடத்தக்கது.

(யோ)

## உலங்குவானூர்தி

சுமார் பத்திற்கும் மேற்பட்ட தடவை துண்டுப்பிரசுரங்களை வீசியது.

இத் துண்டுப்பிரசுரங்கள் காற்றோடு காற்றாக அடித்துச்செல்லப்பட்டு மேற்படி பகுதிகளில் வீழ்ந்தன.

மேலும் உலங்கு வானூர்தியின் திடீர் இந் நடவடிக்கையை வீதியோரங்களில் மக்கள் நின்று அவதானித்துக் கொண்டிருந்ததைக் காண முடிந்தது. (பா)

இல்லை. இது ஒரு உள்நாட்டுப் பிரச்சினை என்று நாம் கூறுகின்றோம். அது உண்மைதான். எந்தவொரு வெளிநாட்டு இராணுவமும் படை எடுத்து ஆக்கிரமித்திருக்கவில்லை.

இனப்பிரச்சினைக்கு பேச்சுவார்த்தை மூலமே தீர்வொன்றைக் காணமுடியும். எமது பிரச்சினைக்கு நாமாகவே தீர்

சித்தாண்டிப் பகுதியில்

# தலைகள் துண்டிக்கப்பட்ட இளைஞர்களின் முண்டங்கள்

[மட்டக்களப்பு]

மட்டக்களப்பில் சித்தாண்டியில் அடிக்கடி தலைதுண்டிக்கப்பட்ட இளைஞர்களின்முண்டகள் வீதியில் கிடக்கின்றன.

இதை சிறிலங்கா விசேட படையினரே மேற்கொண்டு வருகின்றனர். சித்தாண்டி இராணுவ முகாமில் உள்ள இந்த விசேடபடையினர் மோட்டார் சைக்கிளில் வீதி ரோந்தை மேற்கொள்கின்றனர்.

'மோட்டார் சைக்கிள் பார்ட்டி' என அப்பகுதி மக்களால் பீதியுடன் கூறப்படும் இப்படையினர் கைது செய்யும் இளைஞர்களே பின் தலை துண்டிக்கப்பட்டு வீதியில் போடப்படுகின்றனர்.

# தபால் ஊழியர் போல் நான் செயற்படுகிறேன்

## அரச அதிபர் தெரிவிப்பு

யாழ்ப்பாணத்திலிருந்து கொழும்பு வரும் ஒவ்வொரு தடவையும் குறைந்தது மூன்று பைகளில் தபால்களை எடுத்து வருகிறேன் இவ் வகையில் என்னிடம் வரும் விருந்தினர்களுக்கு ஒரு தபால் ஊழியர் போலவே செயற்பட வேண்டியுள்ளது இவ்வாறு யாழ்ப்பாண அரசாங்க அதிபர் கா. மாணிக்கவாசகர் கொழும்பு வார இதழ் ஒன்றுக்கு பேட்டியளிக்கையில் தெரிவித்தார். அவர் மேலும் கூறுகையில்; சில சமயங்களில் நான் ஒரு பாராளுமன்ற உறுப்பினர் போலவும் செயற்பட வேண்டியுள்ளது. யாழ்ப்பாண மக்களின் பிரச்சினைகளை கொழும்பில் தெரியப்படுத்தும் ஒரு தொடர்பாக இருப்பதாகவும் குறிப்பிட்டார்.

அங்கு கடமையாற்றுவதில் ஏதாவது சங்கடங்கள் அல்லது வசதியீனங்களை எதிர்நோக்குகிறீர்களா எனக் கேட்டபோது அவர்களின் ஒத்துழைப்புடன் செயற்படுவதால் அத்தகைய சங்கடம் எதுவும் தனக்கில்லை எனவும்தெரிவித்தார். எனினும் விடுதலைப் புலிகளிடம் இருந்து விசேட சலுகை எதுவும் தனக்கு கிடைப்பதில்லை. இப்பகுதியில் வாழும் எல்லா சாதாரண மக்களையும்போலவே பாஸ் பெற்றுத்தான் பயணம் செய்கிறேன். பன்முகப்படுத்தப்பட்ட வரவு செலவுத் திட்டத்தின் சிரான வேலைத் திட்டங்கள் மற்றும் ஜனசவிய திட்டங்கள் போன்றவை பற்றி அரசாங்க அலுவலகத்தில் எனது தலைமையில் நடக்கும் கூட்டங்களில் புலிகளும் வந்து கலந்து கொள்கின்றனர். இது உண்மை இதனை தவிர்த்து செயற்பட முடியாது என்றும் அவர் தெரிவித்தார்.

பேப்பர் வேலைகளில் மட்டுமன்றி இராணுவத்தால் தடைவிதிக்கப்பட்ட பிளக், நப்தலின் முட்டைகள் போன்றவற்றை தமது குடும்பத் தேவைக்காக எடுத்துச் செல்வதற்கு கூட்டுப் படைத் தலைமையின் அனுமதியை பெறுவதிலும் கூட அவர் கவனம் செலுத்தவேண்டியுள்ளது எனவும் அப்பத்திரிகை மேலும் தெரிவித்துள்ளது.

## வடபகுதியுத்த

யில் மன்னாரில் வெளிபான பகுதியில் பாதுகாப்பின்றி இருக்கும் இராணுவ முன்னணி நிலைகள் புலிகளின் இலகுவான தாக்குதலுக்கு உள்ளாகும் அபாயம் இருந்தது.

இராணுவம் இப்போது பின்வாங்கிய இடங்களில் இருந்த இராணுவ நிலைகளை புலிகள் அழித்துவிடுவர். இவற்றை இராணுவம் 1990 இல் இரண்டாவது ஈழப்போர் ஆரம்பித்தது முதல் பல மாதங்களாக அமைத்திருந்தது. இந்நிலையில் இப்போது புலிகள் மன்னாரின் பெரும்பகுதியை தம் வசமாக்கியுள்ளனர். இது போரில் முக்கியமான, பெறுமதியான பிரதேசம். இதன் மூலம் புலிகள் எவ்வாறு முன்னேறி வருகின்றனர் என்பதை கண்டுகொள்ள முடிகிறது என அப்பத்திரிகை தெரிவித்துள்ளது.

## சித்திரவதை

யில், நான் சிறிலங்கா கடற்படையினரால் கைது செய்யப்பட்டபின்னர் ஐந்து இராணுவ முகாம்களில் சிறை வைக்கப்பட்டேன் ஆனால் கொடுமைக்கும் சித்திரவதைக்கும் பலாலி இராணுவ முகாம் முதலிடம் பெறுகிறது. காரைநகர் இராணுவ முகாம் இரண்டாவது இடத்தைவகிக்கிறது.

பருத்தித்துறை கடற்பரப்பில் வைத்து 4.2 91 அன்று கைது செய்யப்பட்ட நான் பலாலியில் பதின்மூன்று மாதங்கள் தடுத்துவைக்கப்பட்டேன். அங்கே தமிழ் இளைஞர்கள் மீது சித்திரவதைகளும் கெடுபிடிகளும் கட்டவிழ்த்து விடப்பட்டன இராணுவத்தினரால் நாங்கள் படுமோசமாக அடிக்கடி தாக்கப்படுவோம்.

பலாத்கார முயற்சியில் என்னை விடுதலைப் புலிகள் என ஒப்புக்கொள்ள முயற்சித்தனர். ஆனால் நான் பொதுமகன் என்று கூறியதற்காக என்மீது மின்சாரம் பாய்ச்சப்பட்டது ஒரு மாத காலமாக எனக்கு மின்சாரம் ஏற்றப்பட்டது.

இராணுவத்தினரின் கண்மூடித் தாக்குதல்களால் நான் நடக்க முடியாமல் முடங்கிக் கிடந்தேன். இயற்கைக் கடனைக் கழிக்கக்கூட முடியாமல் அவதிப்பட்டிருந்த வேளை மற்றைய தமிழ் இளைஞர்களால் தூக்கி எடுத்துச் செல்லப்பட்டு இயற்கை கடனை கழித்தேன்.

இதே காலநிலையில் எட்டு மாதங்கள் இரவு பகலாக கண் கட்டப்பட்ட நிலையில் இருந்தேன். கண் கட்டப்பட்ட நிலையிலேயே உணவு உண்ண வைத்தனர். சிறிலங்கா படையினரிடம் கைது செய்வதை விட தற்கொலை செய்வதே மேல் என்றார். (யோ)

# அகதிகள்

## வருகை நிறுத்தம்

இம் மாதம் 29 ஆம் திகதியுடன் தமிழகத்திலிருந்து திருக்கோணமலைக்கு அகதிகளை ஏற்றிவரும் கப்பல் சேவை நிறுத்தப்படவுள்ளது என்று தெரிவிக்கப்படுகிறது.

இத்துடன் அகதிகளுக்கான இவ்வருட கப்பல் சேவை இடை நிறுத்தப்படவிருப்பதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

## வெற்றிநாள்

டுள்ளது. இவற்றைவிட பல்வேறு பகுதிகளிலும் பல்வேறு அமைப்புக்களும், நிறுவனங்களும் ஊர்திகள் மூலமும் கொருக்கூத்துக்கள் மூலமும் வெற்றியின் களிப்பை வெளிப்படுத்தியுள்ளன.

மேலும் பொதுமக்கள் முகங்களிலும் வெற்றிக்களிப்பின் வெளிப்பாட்டைத் தாராளமாக அவதானிக்க முடிந்தது. தகர்த்தெறியப்பட்ட சிங்களப் படைகளின் முகாமின் மாதிரி அமைப்பைகொண்டு கண்காட்சிக்கும்மக்கள் ஆயிரக்கணக்கில் திரள் திரளாகச் சென்று கொண்டிருந்தனர் மேற்படி கண்காட்சித்திடலில் மக்கள் பெருமளவில் திரண்டிருந்தனர். இவற்றைவிட புறநகர்ப் பகுதிகளில் நடாத்தப்பட்டு வரும் தெருக்கூத்து நிகழ்வுகளின்போதும் மக்கள் ஆர்வத்தோடு கூடி தமது வெற்றி உணர்வை வெளிக்காட்டியுள்ளனர். [க]